KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ௵ மார்ச்சு ௴ 20௳ [No. 12.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 221
2. அப்பர் (திருத்தம், சத்தப்பிரமம்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 223
3. கம்பராமாயணம் (மந்திரப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. 225
4. நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—2 திருமொழி) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 228
5. மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 230
6. ஆச்சரிய சூடாமணி (மாயாசீதை அங்கம்) R. முத்தையர் 231
7. இலஞ்சிப் பாவை(கரிக்கோற்சின்னம் சுற்றிய கோலம்)T. S. நடராஜபிள்ளை. B A., B.L 233
8. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 235
9. வர்த்தமானம் 239

கலாநிலயம்

சுயநலச் சோதனை.

7

காமம் கள் களவு கவறு ஆகிய தீத்தொழில்களைப் புரிவதால் ஒருவரும் கெட்டவ ராவதில்லை என்று கட்டுரைத்து இத்தொடர்த் தலையங்கத்தினைத் துவக்கி, உலகமலைவாய் முரணிநிற்பதெனத் தோற்றும் இவ்வாசகத்திற்கு அமைதியாக, முன்னரே கெட்டிருப்போர்மட்டுமே இத்தொழில்களைப் புரிவார் எனப் புகன்றனம். ஆதலின், இத் தீத்தொழில்கள் நிகழ்தற்குக் காலமும் இடமும் கருவியும் கைகூடாத வாறு சட்டங்களாற் செய்யமுயல்வதில் யாதும் பயன் இலதென்றும், இத்தீமைகளைத் தூண்டிநிற்கும் மூலகாரணம் நீங்காதவரையில், அதன் காரியங்களாகிய இவைகளில் ஒன்றினை மறித்தால் அது வேறொன்றாய் மாறித் தோன்றாது தீராது என்பதனையும் செப்பினேம். தீமையுளதெனில் அதன் பெயரும் புரிதொழிலும் யாவதாயினும் என்? இட்டுண்ணாமை இழிதகைத் தீமையே. சட்டத்தால் ஒன்றும் இது விலக்கக்கூடியது மன்று. இக்கரவிற்கும் கள்ளத்திற்கும் இடைநின்ற வேற்றுமை இல்லையெனல் அமையும். கள்வாரைக் கடிவதெல்லாம் தீதினையொன்றும் தீர்த்த தாகாது. இரவலற் கீயாக் கரவாயின் என், பெறுதற்கொன்றைக் களவாடினால் என்? இவையிரண்டும் 'வெஃகுதல்' என்னுமோர் தீமையின் இருவகைத் தோற்றங்கள் அல்லவோ? தமிழ்மொழியில் கரவென்னும் ஒரு சொல்லே இவ்விரு பொருளொடும் பொதுவாய் வழங்கலாவதே இதன் உண்மைக்குச் சான்றாகும். ஆதலின் உண்ணின்ற வொரு தன்மையின் மாறுபடு பல் தோற்றங்களில் ஒவ்வொன்றினை நீக்குகின்ற ஊக்கமதால் நிலையாய பயனேதும் இலையென்னல் இக்கட்டுரையால் பெற்றதோர் முடிவாகும். எனின், தீமையின்பால் தூண்டுகின்ற அம் மூலகாரணத் தன்மையை உன்னுதல் வேண்டுமென உரைக்கலுற்றேம். காரணகாரியத்தொடர்பின் ஆதி முதலும் கோடிமுடிவும் இன்னதெனத் தேர்கின்ற ஆராய்ச்சியின் அருமையை ஒருவாறு செப்பி, நம் மனோ வாக்கு காயங்களின் தொழில்கள் அனைத்திற்கும் அடிப்படையாய மூலகாரணமும், இவையெலாம் ஒருங்கே குவிந்து குறிக்கொள்ளும் முடிவுப்பயனும் இதுவிது வென உறுதியாய்த் தேர்ந்துகொள்ள முயன்றவ ராயினேம். அம் முயற்சியின் முடிவாய் மானுடர் தொழில்களுக்கெல்லாம் மூலமாயிருப்பது இச்சை என்னும் அச் சக்தி நிறையவேண்டுதல், அந் நிறைதலால் விழைகின்ற இறுதிப்பயன் அவரவர் நன்மையே ஆதல், ஆகிய இவ்விரண்டினையும் எய்தினேம். இதனின்று நன்மையென்பதன் இலக்கணம் இன்னவாறு நோக்குகின்றதென்பது ஒருசிறிது தோன்றலாயிற்று. கருதிய பயன், அது யாவதேயாயினும், கைகூடப்பெற்ற வொரு நிலையே நன்மை என்ன உரைக்கப்பெறுகின்றது என்னும் நுண்மையை மானதசாத்திர அனுபவங்களாலும், நல்லபாம்பு, நல்லகத்தி என்பனபோல் வழங்கலாகும் உலகவழக்கினின்றும் விளக்கினேம். இது விளங்கியதெனின் தன் செய்கையின் பயனை நாடுவதெல்லாம் தன் நன்

மையையே நாடுவதாகும் என்பதை உணர்தல் அருமை யாகாது. எனின் எவ்வகைச் செயலையும் செய்யுங்கால் அச் செயல் நிகழ்கின்றகாலத்தில் நற்செயல்கள் என்னும் ஒருவகைக்கே உடன்பட்டு நிற்குமென்பதும் வெளிப்படை. (இச்செவ்வியில், நற்செயல் செய்வதென்பதற்கும், நன்மை செய்வதென்பதற்கும் நாம் முன்காட்டியுள்ள வேற்றுமையை மறத்தலாகாது).

ஆதலின் இச்சையானது தன்னை முழுவதும் நிறைத்துக்கொள்ளவேண்டும் என்னும் தூண்டுதலே வாழ்க்கைத் தொழிலனைத்தையும் ஊடுருவிக் கோத்து நிற்கும் நூல்போன்றதென்பதும், அன்னதோர் குறைவற நிறைந்த நிறைவே நலனுறு வாழ்க்கையின் பயனென்பதும், இதற்கு மாறாய யாவும் தீமையென நீக்கப்படுவது மாகும். இதன்படி இன்னுயிரேனும் கொள்வான்முதல் கொடுப்பவன் ஈறாக எத்திறத்தினேனும் இயற்றும் தொழில்கள் அவ்வப்போது அவனவனது நன்மையையே நாடியவாய் நிகழலாயினவாறும் நவின்றுளோம். எனினும், இவ்விரண்டிற்கும் வேற்றுமை இல்லையெனலும் இயையாது. அண்மைப் பயனை முன்னி அதனோடு அமைந்ததெனின் அது வாழ்க்கைப்பயனைப் பூரணமாக்குவதற்கு உதவியொன்றும் புரியாதென்றும், இவ் வண்மைப்பயனைக் குறிக்கொள்ளா நோக்கமே நிலையாய முடிவுப்பயன்பால் உய்ப்பதாகும் என்றும், முன்னிங்கு உரைத்திருப்பவைகளையும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

கொண்டக்கால், எண்ணம் போமளவு இச்சையும் போதல்கூடும் என்னும் உண்மையோடு நோக்கி உணர்வார்க்கு அலகுள நிகிலப்பொருள்கள் அனைத்துமே ஒன்றுசேரினும் அவ்விச்சையின் முழுவதையும் நிறைப்பதென்பது இயலாமை புலப்படும். அண்மைப் பயனின் அளவெல்லாம் நிகிலப்பொருளில் அடங்கியுளது. ஆதலின் அண்மைப்பயன் எதுவேயாயினும் அதனை எய்துவதால் நன்மையும் எய்தப்பெற்றது என்பது நேரிதன்று. இதற்கு, மற்று அதற்கு, நல்லதென நவில்வதற்குரிய பொருள்களையும் அந்தப் பொருளை யெய்த முயல்கின்ற தொழில்களையும் போக்கி, நன்மை என்ற இறுதிப்பயனுக் கேற்றனவே வையத்தில் வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்க்கையில் தெருண்ட காட்சியரால் வேண்டப்படும்.

எனவே அந் நன்மையென்பது எய்துதற்குரியவோர் இயற்கைநிலையே யன்றிச் செய்கைக் கொரு பொருளாந் தன்மை வாய்ந்ததன்று. இச்சை முழுவதும் நிறைந்தாலன்றி அது அடங்காதென்பதும் அது அடங்குவதே அமைதிநிலை யென்பதும் இவ்வமைதிநிலையே நன்மைநிலை என்பதும் இதுகாறும் உரைத்தவைகளால் உணர்ந்தபின், அமைதியே மாந்தர்களுக்குரிய இயற்கைநிலை யென்பதை எடுத்து நாமினிப் பலபட நுவலவேண்டுமோ? ஆதலின் இவ்வமைதியை யடைவதற்கு இடையூறாய் நிற்பனவே இயற்கைக்குறையாம். அவ்வியற்கைக்குறை எத்தன்மையதென்பதுவும், பெற்றவளவு நிறைவுற்ற உணர்ச்சிக்குரியதாவதே அதன் இலக்கணம் என்பதையும் உதாரணங்களுடன் உணர்த்தி மற்றச் செயற்கைக் குறைகளை வேறுபடுத்திக் காட்டி, நிறைக்கலாகாச் செயற்கைப் பொருள்களால் அவைகளை நிறைக்கஉழல்கின்ற லோகாயதர் உள்ளத்திலும் ஒருபோ தல்லாங்கால் ஒருபோது உண்மைக் குறையின் உணர்ச்சி உட்புகுந்து உறுத்திவரும் மெய்ம்மையையும் முன்னைநாள் இயம்பி முடித்தோம்.

இத்துணையும் உய்த்துணர்ந்தோர்க்கு இனியுரைக்க ஒன்றிரண்டு சொற்களுக்குமேல் நிற்கவில்லை. அலகிலா விச்சையை அமைதியுற அடக்குதற்கு வல்லதொரு பொருளும் அலகில்லாத் தன்மையதாதல் வேண்டுமென்பது வெளிப்படை. அண்டங்களுக்கெல்லாம் அலகுளதாதலின் அவைஇச்சையின் இயற்கைக் குறையை நிறைக்கவல்லன அல்ல. அவ்வண்டங்களிலடங்கிய இடம் பொருள் ஏவல் மற்று ஆயுளுங்கூடவாகா. ஆனல் அன்பிற்கோ வளவில்லை, அறத்திற்கோ வளவில்லை, மெய்ம்மைக்கோ வளவில்லை, அழகிற்குகோ வளவேயில்லை; யெனின், இவையல்லால் யாவையே இவ்விச்சையை நிறைக்க வல்லன. இத்தத்துவங்களை வெவ்வேறு பெயரால் அழைக்கின்றேமெனினும் அலகிலாத் தன்மையால் இச்சையை நிறைக்கவல்லதோர் நிலையினில் நிற்பதால், ஒன்றேயாகின்றன. இதனோடு அங்கு இங்கு அன்று இன்று என்ற எல்லையிலா அத் தனிப்பரம்பொருளையும் சேர்த்துக்கொள்வோமெனின், முதற்காரணமாகிய விச்சைக்கு முடிவுப்பயனு யமைய வல்லது அன்பே, அறனே, அழகே, மெய்யே, பரம்பொருளே என்னத் தேர்வதற்கு நம் மனமே யல்லாது வேறோர் உதவி வேண்டுமோ? அறிவிற்கு மளவில்லை என்னு மதத்தையும் மேற்கொண்டால் அப் பரம்பொருளை அறிவன் என்றும், மெய்யன் என்றும், அறக்கடவுள் என்றும், நன்மையன் என்றும், அன்பே யாயவன் என்றும், குழகன் என்றும் குறிப்பதன் பொருள் உணர்ந்தவரு மாவோம். 'அன்பும் அறனும் உளதாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' என்ற வள்ளுவனார் இந்த உண்மையையே சாற்றினர் அல்லரோ?

நலமென்பதன் இலக்கண மின்னதாயின் இதனை நாடுவோனே சுயநலச் சூழ்ச்சியன் என்பதற் கொத்தவனுவான். அன்னவனை உலகும் ஒரு வாயாய்ப் பாராட்டும். மற்று, சுயநலமுடையவனென்று இகழப்படுவோர் பிறரெல்லாம் தமக்கு நல்லன அல்லாதவற்றையே நாடுகின்றாராதலின் அறிவுடையோரால் பெரிதும் இரங்கப்படுவதற்கே இலக்காய் நிற்கின்றனர்.

கம்பராமாயணம். வை. மு. சடகோப ராமானுஜாசாரியார், கே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலா கிருஷ்ணமாசாரியார்–பதிப்பு,

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கியிருக்கின்றன. பாலகாண்டம் ரூ 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரண்யகாண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0 சுந்தரகாண்டம் ரூ. 5. (வி.பி. செலவுவேறு) **கலா நிலயம் ஆபீஸ்,** புரசைபாக்கம், சென்னை.

அப்பர்

8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

5. நிருத்தம்.

[204-வது பக்கத் தொடர்ச்சி]

(iii) நிருத்தத்திற் றேழில்புரியு மவயவங்கள்.

நிருத்தத்தில் பயன்படும் அவயவங்கள் மூன்று. அவை, கை கால் கண் என்பனவே. கை, ஒற்றைக் கையாயின் பிண்டி யென்பர். இரட்டைக்கை யாயின் பிணையலெனப்படும். பிண்டி முப்பத்திமூன்றுவகையும், பதினைந்துவகைப் பிணையலும் அடியார்க்குநல்லார் அரங்கேற்றுகாதை யுரையில் தொகுத்தும் வகுத்தும் காட்டுகின்றன காண்க. இதன்றியும், சுத்தானந்த பிரகாசம், ஆண்கை பெண்கை அலிக்கை பொதுக்கை யென வகுக்கும். மற்றும் எழிற்கை, தொழிற்கை, பொருட்கையென* மூன்று பாகுபாடுகளும் உள. இவையன்றியும் சதுரச்சிரம் முதலாக வலிதை ஈறாக நிருத்தக்கை முப்பதென்பர் சுத்தானந்தப் பிரகாச நூலார். இப் பல்வகைக் கைகளையும் விளக்கிக்காட்டும் உதாரணங்கள் தேவாரப் பாசுரங்களிலிருப்பினும், அவற்றை யெடுத்துக்காட்டல் பின்னர் ஆராய்ச்சி செய்யும் அறிஞருக்கு விடப்பட்டது †.

கால் அல்லது பாதம் ஐவகைப்படும். அவையே, சமநிலை உற்கடிதம் சஞ்சாரம் காஞ்சிதம் குஞ்சிதமென்பன. இவற்றுள் குஞ்சிதமே சிறந்தது. சிவபெருமான் திருப்பாதங்கள் குஞ்சிதபாதங்கள். இப் பாதங்கள் அலுக்கா. தில்லையில் சமநிலையாய் ஆடி, அடியார்கள் மனதை வேறுவழிச் செல்லாது மிதித்துத் திருநெறியில் வைப்பனவாம். இத் தன்மையை அப்பர்,

சிந்தையைத் திகைப்பியாதே
செறிவுடை யடிமைசெய்ய
எந்தைநீ யருளிச்செய்யா
யாதுநான் செய்வதென்னே
செந்தியார் வேள்வியோவாத்
தில்லைச்சிற் றம்பலத்தே
அந்தியும் பகலுமாட
வடியிணை யலசுங்கொல்லோ. 4

மனத்தினார் திகைத்துநாளு
மாண்பலா நெறிகண்மேலே
கனைப்பரா லென்செய்கேனோ
கறையணி கண்டத்தானே
தினைத்தனை வேதங்குன்றாத்
தில்லைச்சிற் றம்பலத்தே
அனைத்துநின் னிலயங்காண்பா
னடியனேன் வந்தவாறே. 8

கோயில்-திருநேரிசை.

என்பர். நிருத்தக்கலையை நன்கு விளக்கும் இப் பதிகத்தின் மற்றொரு செய்யுளில் நடலைவாழ்விற் கட்டுப்பட்ட மாந்தர் சஞ்சார பாதத்தையும் அப்பர் குறிப்பிட்டுக் காட்டுவதைக் காண்க:—

கண்டவா திரிந்துநாளு கருத்தினா னின்றன்பாதங்
கொண்டிருந் தாடிப்பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டுபண் பாடுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
எண்டிசை யோருமேத்த விறைவநீ யாடுமாறே.

ஷை 5.

முகத்தில் விளங்கும் கண்களே நிருத்தக்கலையை ஸ்புடம் செய்வனவாம். இவையே கலையின் எழிலை விளக்குவன:—

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி
னோக்கு முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண்
ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலுமென் பரவிநெஞ்சிற்
குடிகொண்ட வா தில்லை யம்பலக்
கூத்தன் குரைகழலே

கோயில் - திருவிருத்தம் 7.

மட்டுண் பார்கள் மடந்தையர் வாட்கணால்
கட்டுண் பார்கள் கருதுவ தென்கொலோ
தட்டு முட்டித் தள்ளாடித் தழுக்குழி
எட்டு மூர்த்திய ரின்னம்ப ரீசனே!

திருவின்னம்பர் - திருக்குறுந்தொகை 2

நோக்காதே யெவ்வளவு நோக்கி னானை
நுணுகாதே யாதொன்று நுணுகி னானை
ஆக்காதே யாதொன்று மாக்கினானை
யணுகாதா ரவர்வம்மை யணுகா தானைத்
தேக்காதே தெண்கடனஞ் சுண்டான் றன்னைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நீக்காத பேரொளிசேர் நீடு ரானை
நீதனே னென்னேநா னினையா வாறே!

திருப்புன்கூர் - திருநீடூர் - திருத்தாண்டகம் 5.

6. சத்தப் பிரமம்.

(i) இசைமண்டபமும் அதன் சூழ்ச்சியும்

சத்தப்பிரமம் என்னுமிக் கலையினை நாதப்பிரமம் என்றும் பகர்வர். இது நாடகத்திற்கும், அதற்குச் சம்பந்தமான இசைக்கருவிகளின் கலைகளுக்கும் அடிம்படையாய் விளங்குவதாம். அவைக்கும், அங்கு வரும் கூட்டத்திற்கும் ஏற்றவாறு பாடல்களையும் இசைக்கருவிகளையும் தக்க ஓசையளவில் வைப்பது தலைக்கோ லரிவையின் கடனும். நூறு கெஜத்திற்கு அப்புறம் கேட்கவேண்டியவாறு, ஒரு சிறு அறை அல்லது கூட்டத்திற் பாடுவது இன்பம் பயக்காது. இப்போது நாட்டுப்புறங்களில் ஆடும் தெருக்கூத்து இதற்கு உதாரணமாகும். இதில் கூத்தர் பெருங்குர

---

* "எழிற்கை யழகே தொழிற்கை தொழிலே
பொருட்கை கவியிற் பொருளாக் கும்மே"

† A matter for further research, which the writer found no time to do.

லுடன் பாடுவது வழக்கமாதலால், இவர்களது இசையில் யாதொரு பழுதில்லாவிடினும் இவர்கள் பாட்டின் ஓசை நமக்குச் சில சமயங்களில் தலைநோய் தரும். எனவே, இசைக்கருவியாயினும் சரி, மிடற்றுக்கருவியாயினுஞ்சரி, சபைக்குத் தக்கவாறு நாதத்தை நிலைநிறுத்தல் இசையோன் கடமையாம்.

ஓசையை உயர்த்துவதற்கும் தாழ்த்துவதற்கும் பரப்புவதற்கும் சுருக்குவதற்கும் தக்கவாறு ஓசைத்தத்துவ நூலாசிரியர்கள் பற்பல ஆராய்ச்சிகளிற் புகுந்து பற்பல தந்திரங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். இன்னும் அன்னோர் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டே வருகின்றன. இசையோன் நாதமெனின், கேட்கும் சபைமுற்றும், ஒரு செவிக்கேடாகும் செவியெவ்வாறமையப்பெற்றிருந்தால் செவிட்டுத்தன்மை சிறுபான்மையு மிலதாய் விளங்குமோ, அவ்வாறே சபையின் கட்டடத்தை யமைப்பர். "ஐதுமண்டலம்" என்பதை நாடகவியலில், தலைக்கோலரிவை நிலையைக் குறித்துக்கூறினேம். மண்டலமென்னும் அரைவட்ட மேடையில், தலைக்கோலரிவைக்குப் பின்னர் எழினிகள் (திரைகள்) தொங்கவிடப்பட்டு அவற்றில் ஓவியங்கள் எழுதும் வகைகளும் கண்டோம். இவற்றின் பயன், சப்தம் பின்னுக்கும் மேலுக்குஞ் செல்லாமற்றடுப்பதேயாம். தலைக்கோலரிவையும், அவள் இசைத்துணைவரும் பாடும் பாடலோசை ஒரு வில்லினின்று எய்யு மம்பு்போல் சபையின் நடுவே யூடுருவிச்சென்று இசைபரப்பும் இத்தகையசூழ்ச்சி இசைமண்டபங்களுக்கு இன்றியமையாததாம்.

இச் சூழ்ச்சி இசைமண்டபத்தில் மாத்திரமன்றி இசைக்கருவிகளிலும் வைக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். இவற்றில் முக்கியமாய் வீணையில் உயர்ந்த ஓசையுந் தாழ்ந்தவோசையுங் கொடுக்கும் ஸ்வரப்படிகள் வெளிப்படையாய்க் காணலாகும். ச, ரி, க, ம, ப, த, நி, என்னும் ஏழிசைகள் பித்தளைக் கம்பிகளிரண்டில் ஐந்துதடவையும் (ஒரு கம்பிக்கு இரண்டரையாக) அவற்றிற்கடுத்த இரண்டு எஃகுகம்பிகளுக்கு ஐந்து தடவையும் வருவன, ஏழிசையைப் பத்துவித* அந்தஸ்தில் ஒலிக்க வைப்பதற்கன்றோ? இச்சூழ்ச்சி மேல்நாட்டு இசைக்கருவிகளான வையலின், ஹார்மோனியம் (Violin, Harmonium) முதலியவற்றிலுஞ் சிறிது காணலாம். ஏனெனில், இசையோன் பலவிடங்களிற் சென்று பாடவேண்டியிருப்பதாலும் பாடும் மண்டபங்கள் ஒரே தன்மைபவா யிராவாதலாலும், இசைக்கருவிகளிலும் இடத்துக்குத் தக்கவாறு ஓசைமாற்றும் சூழ்ச்சிக ளமையும்.

ஓசையானது, மற்றெல்லாச் சக்திகளும் நமதுலகத்தில் பரவுவதுபோல்‡ தரங்கரூபமாய்ப் பரவுமென்பது மேல்நாட்டு இயற்கைத் தத்துவநூற் சித்தாந்தமாம். ஓசைபரப்புதலும் ஒளிபரப்புதலும் மாத்திரமன்றி எவ் வினையும் அலையுருவமாய் உலகிலும் உடலிலும் பரவுமென்பது நமது திருநாவுக்கரசர் உணர்ந்ததேயாம். திருஞானசம்பந்தர் ஒலிவகை தட்டுங்கால் வட்டவடிவாய்ச் சுவர்முதலியன வமைதல் நன்றெனக் குறிப்பது காண்க:—

> கட்டுவட மெட்டுமுறு வட்டமுழ வத்தில்
> கொட்டுகர மிட்டவொலி தட்டும்வகை நந்திக்
> கிட்டமிக நட்டமவை யிட்டவ ரிடஞ்சீர்
> வட்டமதி லுட்டிகழும் வண்டிருவை யாறே.
>
> திருவையாறு - திருவிராகம் - பண் - இந்தளம் - 3

ஓசையானது எப்பக்கத்திலும் பரவும் தரங்கமுடையதேனும் இதன் எல்லைபைநன்கு வரையறுக்கக் கூடும். ஏழு நரம்பின் இசை நீயேயென்று கூறிய அப்பர் அதைக் கூறுமுன்னர், எல்லை நிறைந்தவனே எனப் பரமனை மொழிவர்:—

> தொல்லைத் தொடுகடலே யென்றே னானே
> துளங்கு மிளம்பிறையா யென்றே னானே
> எல்லை நிறைந்தானே யென்றே னானே
> யேழ்நரம்பி னின்னிசையா யென்றே னானே
> அல்லற் கடல்புக் கழுந்து வேனை
> வாங்கியருள் செய்தா யென்றே னானே
> எல்லையா மையாறு வென்றே னானே
> யென்றென்றே யானரற்றி நைகின் றேனே.
>
> திருவையாறு - திருத்தாண்டகம் - 4

இதன்றியும் திருநாவுக்கரசு, ஓசையும் அது மிகுந்து ஆக்கும் * ஒலியும், அவற்றிற்கு அடிப்படையான நாதமும். இவற்றினிடையே உள்ள பற்பல அந்தஸ்துகளும் செவ்வனே யுணர்ந்தவர். இதனாலேயே, நாம் ஒரேபொருளுடையனவென்று கருதும் ஓசை, ஒலியென்பனவற்றை வேறாய்ப் பிரித்துக்காட்டுகின்றார்:—

> ஓசை யொலியெலா மானாய் நீயே
> யுலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
> வாச மலரெலா மானாய் நீயே
> மலையான் மருகனாய் நின்றாய் நீயே
> பேசப் பெரிது மினியாய் நீயே
> பிரானா யடியேன்மேல் வைத்தாய் நீயே
> தேச விளக்கெலா மானாய் நீயே
> திருவையா றகலாத செம்பொற் சோதி!
>
> திருவையாறு - திருத்தாண்டகம் 1.

அரங்கானது, களர் முதலிய குற்றமுள்ள நிலத்திலமைக்கக் கூடாதென நாடகவியலிற் கண்டோம். இதற்குக் காரண மென்னையெனின், அரங்கின்கண் நடமாடிப் பாடுங்கால், கூத்தரின் பாடல்கள் ஓசை தாக்கும்

*The ear can hear 11-octaves, but the appreciable music is within 10 octaves.

‡ அலையார் வினைத்திறஞ்சே ராக்கை யுள்ளே
யகப்பட்டு ளாசையெனும் பாசந் தன்னுள்
தலையாய்க் கடையாகும் வாழ்வி லாழ்ந்து
தளர்ந்துமிக நெஞ்சமே யஞ்ச வேண்டா
இலையார் புனற்கொன்றை யெறிநீர்த் திங்க
ளிருஞ்சடைமேல் வைத்துகந்தா னிமையோ ரேத்தும்
நிலையா னுறைநிறை நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 4.

* நாதனை நாதமிகுத் தோசைய தானவனை
ஞான விளக்கொளியா மூனுயிரைப் பயிரை
மாதனை மேதகுதன் பத்தர் மனத்திறையும்
பற்றுவி டாதவனைக் குற்றமில் கொள்கையனைத்
தூதனை யென்றனையா டோழனை நாயகனைத்
தாழ்மக ரக்குழையுந் தோடு மணிந்திருக்
காதனை நாயடியே னெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

சுந்தரர்

ஒவ்வொரு அரங்கின்பாகமும் வெண்கலம்போல் சப்தத்தை விழுங்காமல் சுத்தமாய்த் திருப்பியனுப்பும் குணம்பெறவேண்டு மென்பதற்கே. எழினிகள், பக்கங்களையும் ஆகாயத்தையும் மறைத்துச் சப்தத்தைத் திருப்புமெனினும் மேடையும், தரையும் சமம்போல் சப்தத்தைக் கவரின், பாடல்களின் ஓசை, ஒலிமந்தமாம். இதனாலேயே அரங்கு மணிபோ லிருக்கவேண்டு மென்பர் மேலோர். †

† பண்ணேர்மொழியாளை யோர்பங்குடையாய் !
படுகாட்டகத்தென்று மோர்பற்றொழியாய்
தண்ணார்அகிலுந் நலசாமரையும்
மலைத்தெற்றுசிற்று றதன்கீழ்க்கரைமேல்
மண்ணார்முழவுங் குழலுமியம்ப
மடவார்நடமா டுமணியரங்கில்
விண்ணார்மதிதோய் வெஞ்சமாக்கூடல்
விகிர்தாவடியே னையும்வேண்டுதியே !

சுந்தரர்

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

[216-வது பக்கத் தொடர்ச்சி]

> எய்யுமு னென்னை யைய
> வேதென நினைத்தாய் கோல்லோ!

வழுவில வலவாயினு மிராமன் விளம்பிய காரணங்கள் நீதியேயென வாலி நேர்ந்த தென்னெனத் தேர்ந்திடுமா முயல்வார்தமக்கு, வடநூன்முனிவர் வழங்கியுளவண்ணம் மன்னறத்தின் தன்மை யின்னதெனும் நினைவு உதவிசெய்யும். அத்தகையதோர் சார்பறத்தின் திறத்தினில் உறுதியுடையவனாய் அவ்வானரவேந்தனும் அமைந்திருப்பானாதலின், அம்முறைக்குத் தானேயோ இன்று இரையாதல் வேண்டுமெனுஞ் சீற்றந் தீர்ந்தபின், மன்னரென்றுள யாவரும் செய்வதற் கொத்தவொரு கருமமே இவ்விராமனும் செய்திருக்க இவன்பால் பிழைகாணல் நேரிதன்றெனத் தேறினான். ஆதலின், "ஐய, நாயினேன், நீதியினை யயர்ந்துபோய் நின்னை நிந்திக்க லாயினேன்; என் மடமையைப் பொறுத்தி", என இரந்தபோது வாலி நினைத்திருந்த நீதி மன்னர்க் குரியதென்று மதிக்கப்பெறுமச் சார்பறமே யாதல்வேண்டும். பின், வாய்வழி ஆவியை வழங்குமுன்னர்த் தன் காதன் மைந்தன் அங்கதனை யருகழைத்து, "மகனே, இனி நீ சுக்ரீவன் சொற்படி நின்று, காலமுமிடமுமறிந்து, சுகமடைதல் காரணமாக உனக்கு நேருந் துக்கங்களைப் பொறுத்து நடந்துகொள். என்னிடத்தில் வளர்ந்ததுபோல் நீ இன்னும் இருப்பாயாகில் சுக்ரீவன் உன்னை மதிக்கமாட்டான். நீ ஒருபோதும் சுக்ரீவனுடைய பகைவர்களுடன் சேராதே. அவனுடைய நல்வாழ்விலே எப்பொழுதுங் கருத்துடையவனாய், அவனுக்கடங்கி நடந்துகொள். நீயாருடனாவது அதிக நண்பு பாராட்டவும் வேண்டாம்; நட்புப்பாராட்டாது நடக்கவும் வேண்டாம்; இவை யிரண்டும் மிக்க தீமை பயக்கும்; ஆதலால் நடுத்தரமாக நடந்துகொள்" என்று அறிவுறுத்திய கொள்கையும் வாலி சார்பறமே சேர்ந்த சிந்தையன் என்பதற்குச் சான்றாகும். எனின், தன்னுடைய தன்மையையேகொண் டளக்குங்கால் இராமனது செய்கை இழுக்கற நின்றதென வாலி தணியலாவது திண்ணம்; இராமனைப் பழித்தவண்ணமாய்ப் பகையொடு மாய்வதில் யாதும் பயனிலது. தன் புதல்வனேனும் நீங்குறுவகை இராமனுக்கவனைக் கையடைத்துத் தருவதே அறிவுடைக் கருமமாகும். மன்னறமும் தன்னலமும் தணிவுவேண்ட மாறுபடு மனத்தினனாய் மடியாமல், தக்கதே புரிந்த தகவுடையோன் இராமனென இணங்கினவ னாயினான் வாலி.

இதுகாறும் வான்மீகம்; இதற்கெதிர் கம்பர்பிரான் இந்த நிகழ்ச்சியை எவ்வண்ணம் கையாளுகின்றனர் என்பதைக் கருத்துட்கொள்ளு மளவிற்றான், முதலறத்தின் சிதைவறுபான்மையும், பரமன்புரி கருமங்களின் தர மீதெனு முண்மையும் தெரிவுறக் காணுந் தேர்ச்சியராதல் கூடும்.

குருதிக்கடற் புரளூற்றிடு வடவரை யென்னக் கிடந்த வாலியின்முன் ஒளிவிடமிருந்த வீரன் வந்து தோன்றினான். போர்முறை திறம்பியவோர் புன்தொழிற்கு இரையாய வானரத்தலைவன் அன்னவனைப் பொறிபடச் சினந்துநோக்கிப் பின்வருமாறு ஏசுவான் சில பேசலுற்றனன்:—

"வாய்மையின்பொருட்டுத் தன் குலவொழுக்கம் வழுவாமல் உயிர்நீத்த தயரதன் மைந்தனே, உத்தம பரதனுக்குநீ எப்படித்தான் தமையனானாயோ. உன் குலம் கல்வி கொற்றம் அனைய நலங்களையெல்லாம் அலமரச் செய்தனையே! அரக்கர் உனக்கோர் கெடுதியைச் செய்தனரென்றால் அதற்காக வேறோர் குரக்கினத்தரசைக் கொல்ல வேண்டுமென்று நீ கற்ற மனுநெறி கூறியிருக்கின்றதோ! என்பால் நீ கண்ட பிழை யாது? இரக்க மென்பதையே துறந்துவிட்டனையோ. நீயே இத்தகைய பெரும்பழியை ஏற்றுக்கொண்டனையென்றால் இனிப் புகழைத் தாங்கவல்லவர் வேறு யாருளர்? இதுபோன்ற அநீதி கலியுகத்திற்கே யுரியது. இதுவோ திரேதாயுகம்; ஆயினும் குரங்களுக்குமாத்திரம் கலி பிறந்துவிட்டதென் றெண்ணவேண்டுமோ! ஒழுக்கமெல்லாம் எளியவர்க்கே உரியதோ, வலியோர் இழிந்தவை செய்தாலும் அவர்களுக்குப் பழியிலாது புகழே தான் பெருகுமேயோ! தீவினையென் றஞ்சாது என்னை வஞ்சனையால் வாளா வதைத்த நீயோ இலங்கைவேந்தன் முறையல செய்தானென்று முனிகின்றனை? இருவர் பொரும்போது நீ பக்ஷபாதமற்று இருத்தல்போக்கி ஒளிந்து நின்று ஒருவனை எய்தவிது தருமமோ கூறுவாய்? நின் காரியம் வீரமன்று, விதியன்று, வாய்மையன்று, நீரமுமன்று, ஏனிதனைச் செய்தனை. அல்லது, நீ ஆள்கின்ற மண்ணினுக்கு என்னுடல் ஒன்றுதானா பாரமாயிற்று.

அல்லது சீதையை மீட்கத்தான் உதவி தேடினா யெனின், சிங்கமனைய யானிருக்க முயலைத் துணைக்கழைத்ததுபோல் சுக்ரீவனது நட்பைத் தேடியது நன்மதி யாகுமோ! ஏ, இராம, களங்கமிருந்தும் வெட்கமின்றித் திரிகின்ற சந்திரனைக்கண்டு பொறாமையுற்றுச் சூரிய குலத்திற்கும் மறுவொன்று ஆக்கிவைக்க வேண்டுமெனும் நோக்கத்தால் இது செய்தாயோ!''

இச் சொற்களால் வாலி இராமனைக் கடிந்துரைத்தானென்பது உண்மையே. எனினும் எற்றுக்கு? இவ்வுரைகளை நன்குநோக்கித் தேருங்கால் ஒன்று தெரியலாகும். "என்னைக் கொன்றாயே கொடியோய்'' என்றகுரல் இதனி லில்லை. "இத்தகையதோர் இழிவை நீ செய்தனையே'' என்பதே வாலியின் குறை. இராமனது புகழ் குலம் வீரம் கருமம் யாவும் இதனால் பழுதுற்றனவென்றே வாலி வருந்தினான். தன்னிழவு கருதாப் பெருந்தகைக்கு ஈதே அழகு. பழுதுறா இவ்வம்பு அழுத்தியவன் இராமனென்று அதன்கண் பொறித்திருந்த பேரினின்று உணர்ந்ததும், "சொல்லறந் துறந்திலாத சூரியன்மரபுந் தொல்லை நல்லறந் துறந்ததென்னா நகைவர நாணுட்கோண்டான்'' வாலியெனக் கம்பரும் முன்னர்க் கூறினார். இவ்வாறு தன்னுயிர் மாய்வதுங் கருதாது இராமனுக்கே இரங்கியது மன்றி, இவ்விராமனே அடாச்செயல் புரிந்துவிட்டான் என்றால் பின்வருவோர் இதனை மேற்கோள் காட்டிக்காட்டி என்செயத் துணியார், எனத் தருமமே நிலைகுலைந்து போகுமொரு உலகிற்கே இரங்கினானாய்,

> நூலி யற்கையு நுங்குலத் துந்தையர்
> போலி யற்கையுஞ் சீலமும் போற்றலை
> வாலி யைப்படுத் தாயலை மன்னற
> வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே

[வலிமையுடைய வீரனே, தருமசாஸ்திரங்களின் தன்மையையும், உன் குலத்து மூதாதையர்கள் போன்ற தன்மையையும், நல்லொழுக்கத்தையுங் கடைபிடிக்காமல் செய்த இச்செயலால் நீ வாலியை வீழ்த்தினவன் ஆகாய்—என்றும் ஒருபடித்தாய் நிலைத்துநின்று உலக ஒழுக்கத்தைச் காக்கின்ற அறம் என்னும் வேலியையே அழித்துவிட்டாய்]

எனப் பெரிதும் பரிகின்றான். இராமனையே கருதிப் பேசினான் வாலி என்பதற்கு அவன் தன்னைப் படர்க்கையாக்கிக்கொண்டதே சாலும். இறுதியில், இராமனது பழி எத்தகைத்தென வரையறுப்பானாய்,

> தார மற்றொரு வன்கொளத் தன்கையிற்
> பார வெஞ்சிலை வீரம் பழிப்பதே
> நேரு மன்று மறைந்து நிராயுதன்
> மார்பி னெய்யவோ வில்லிகல் வல்லதே.

[உன் மனைவியை வேறொருவன் கவர்ந்து செல்ல, அதற்கு உன் கையிலிருக்கின்ற வில்லின் வீரம் பழிக்கப் படவேண்டுமோ. (அப்படித்தான் மனைவியைக்கொண்டு கழிந்தவன் ஒருவனாக, அதற்கு மற்றொருவனைக் கொல்ல வேண்டுமென்று நீ எக்காரணத்தினாலேனும் கருதினாயாயினும்) நேராகவந்து நிற்காமல், மறைந்தேநின்று கையில் ஆயுதமில்லாதவன் மார்பில் எய்யவோ உன் வில்வலி வல்லதாயிற்று]

என்று, மறைந்துநின்று எய்ததையே இராமனிழைத்த படுபழியாகக் காட்டுகின்றான். இதுவுமன்றி, இராமன் உரைக்கவல்ல காரணத்தை வாலி ஊகித்து அதுவும் பொருந்தாதென முன்னரே விலக்கினானெனப் பொருள்படுமாறு, "மற்றொருவன் தாரம் கொள...'' என அன்வயித்து, "மற்றொருவன் மனைவியை நான் கவர்ந்துகொண்டேனாலும், மறைந்து நின்று நீ நிராயுதன் மார்பில் எய்து உன் வில்லாண்மைக்குப் பழுது தேடிக் கொள்வானேன்'' என்ற கருத்தும் இச்செய்யுளிற் காணலாம்.

தனதுயிர் கழிவதென்ற சிற்றம் உண்டோ இல்லையோ என்னும்படி சிறந்திருக்க, இராமனது விழுப்பமும் அவன்தொல்குல முன்னையோர் புகழும் பின் வரு முலகத்தினர் ஒழுக்கமும் ஒருங்கே அழிவதோ வென்னும் பரிவுதான் பெருக வாலி புலம்பினானெனப் போகின்றபோக்கில் ஒருவா றிங்குக் குறிக்கலாயிற்றெனினும், இவ்விடத்து நன்கு நோக்குதற்குரியதாய்நிற்பது, தயரதன் தனிமைந்தன் தந்தவிடையுடன் தொடரவாரு மதன் மறுப்பு மாகும். வான்மீகத்தில் வரைந்திருப்பதுபோல் இராமன் இங்கு, மனுநெறிகூறி அதன்படி இராஜதர்மத்தைத் தான் செலுத்தியதாகச் செப்பினா னல்லன். பரதனுக்கொரு பிரதிநிதிநிலையும் தான் வகிக்கவில்லை. அரசுமுறை யொன்றினையும் வாலியைக் கொன்றதற்கு ஆதாரமாகக் காட்டிலன். வான்மீகிமுனிவரிடத்தில் தான் முன்னரே கற்றுள வாசகங்களை இராமன் தமிழிலும் வழங்கிவிட்டிருப்பானாயின் தன் தென்மொழித் தந்தையாகிய கம்பரை யவர்கொள்கையுடன் கைவிட்டவ னென்னலாவான். அரசர்க் கோரறம் வேதியர்க் கோரறம் மற்றைப் பல்வகை வருணம் தொழில் நிலைகளில் இருப்பவர்க்கு வெவ்வே றறமொன்று உளதென ஏற்கும் எண்ணம் அற்றவராய் மாந்தரென்றிருப்போ ரனைவர்க்குமே பொதுவா யமைந்துள்ள மூதற மொன்றேயெனும் கொள்கையைக் கடைபிடித்த கம்பர் தன் கதையை நிகழ்த்துந் தன்மை இதன்முன் பன்முறை இயம்ப நேர்ந்திருக்கின்றது. கம்பர் அன்னவராதலால் இவ்வயின் சிறிதும் அயர்தலின்றி இவ்விராமனைத் தன் கைகடவாமற் காத்தனர் மன்னறங் கூறித் தன் செயலின் அமைதியை விளக்க நினைத்திலன். மன்பதைத் தொகுதிக்கெல்லாம் தகுதியா மறமொன்றினில் வாலி பிழைத்ததை விளம்புவானாகி, அவன் சுக்ரீவனை இரக்கமும் நீதியுமின்றித் துன்புறுத்திய கொடுமையையும் அவனது மனைவியைக் கவர்ந்துகொண்ட பாவத்தினையுமே இராமன் காரணமாகக் காட்டலாயினான்; காட்டி,

> தரும மின்னதெ னுந்தகைத் தன்மையு
> மிருமை யுந்தெரிந் தெண்ணலை யெண்ணினா
> லருமை யும்பித னாருயிர்த் தேவியைப்
> பெருமை நீங்கினை யெய்தப் பெறுதியோ

[அறத்தின் தன்மை இன்னது என்பதையும், இம்மை மறுமைக் குரியவைகளையும் தெரிந்து நீ எண்ணவில்லை. எண்ணினால், அருமையா யிருக்கவேண்டிய உன் தம்பியின் அரிய உயிர்போன்ற மனைவியை பெருமையொழிந்து நீ சேர்ந்திருப்பாயோ!]

எனத் தன் வெறுப்பினைத் தோற்றுவித்து,

> ஆத லானு மவனெனக் காருயிர்க்
> காத லானென லானுநிற் கட்டனே
> னேதி லாரு மெளியரென் றுரையுந்
> நீதி தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ.

[ஆகையாலும், அச் சுக்ரீவன் என்னுயிர்போன்ற நட்பு உடையவனாதலாலும், உன்னுயிரைப் பறித்தேன். மற்று,

அயலானேயாயினும் எளியனாயின் அவனது துன்பத்தைத் தீர்ப்பது என் உள்ளக் கருத்தாம்]

என்று சாற்றினான். "என்பாலெப்பிழை கண்டாயப்பா? கண்டாயேனும் என்னை ஒறுத்தற்கு நினக்கு எவ்வுரிமையுளது?'' என்ற வாலியின் வினாக்களுக்கு இவை விடையாகின்றன. "நின் தம்பிக்கு இழைத்த தீமையோடு அவன் தாரத்தையும் விழைந்தது நினது பிழை. இடுக்கணுற்றவர்க்குதவியாய் அவர் துன்பந் துடைப்பது மனிதர் கடன். ஆதலால், சுக்ரீவனை அளிக்குமாறு யான், தீதுபுரிந்த வுன்னைத் தொலைத்தனன்'' என்ன இராமன் தான் தகவில னல்லனென்பதைத் தெரியக் கூறிவிட்டனன்போல் தோன்றினும் வாலியின் வாயோ இதனால் அடங்கிவிட வேண்டுமென்று எண்ணலாகாது. "எளியரென்றுரைத் தீது தீர்ப்பது மாநுடதர்ம மாகலாம் ஆயினும் அவ்வறத்தினை நீ புரியப்புகுங்கால் மற்றவர்க்கு அதனால் தீமை நேராமற் காக்கவேண்டு மன்றோ. நான் குற்றமுள்ளவனாயின் என்னைக் கொன்றது தீமையாகாது. எனினும் யான் குற்றமுள்ளவன் அல்லன் என்பதை எவ்விதிகொண்டு மதித்தனை. பிறன்மனை விழைதலென்னும் பாவம் மாநுடர்க்கே உரியதன்றோ. யானோவொரு குரங்காயிற்றே. மனித சட்டத்தை விலங்கின்பால் செலுத்தல் ஒண்ணாதகாண்'' என்று காட்டி,

> ஐய நுங்க ளருங்குலக் கற்பினப்
> பொய்யின் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சிபோற்
> செய்தி லன்னெமைத் தேமலர் மேலவன்
> எய்தி னெய்திய தாக வியற்றினான்

[ஐயனே, உங்களது அருமையான குலத்திற் பிறந்து கற்புடையராய்ப் பொய்நெறிசெல்லாமல் ஒழுகும் பெண்களுக்கு உரிய மணவாழ்க்கைப் புணர்ச்சிபோல் எங்களுக்கோ, தேனுடைய தாமரையில் வாழும் பிரம்மன் ஒன்றும் ஏற்படுத்தி யிருக்கவில்லை. மற்று, நேர்ந்தவர் நேர்ந்தவரைப் புணரும்படியன்றோ எங்களை நியமித்திருக்கின்றான்.]

> மணமு மில்லை மறைநெறி வந்தன
> குணமு மில்லைக் குலமுதற் கொத்தன
> உணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
> நிணமு நெய்யு மிணங்கிய நேமியாய்

[பகைவரது நிணமும் நெய்யும் பொருந்திய சக்ராயுதத்தை யுடையவனே, விலங்குகளாகியஎங்களுக்குள், மனம் சென்றவழி செல்கின்றதே ஒழுக்கமாகின்றதே யல்லாமல், சாஸ்திரப்படி செய்துகொள்ளும் கலியாணம் எனப்படுவதொன்றில்லை. குலத்திற்கு ஒத்ததாகிய குணமென்பதும் இல்லை]

> பெற்றி மற்றிது பெற்றதொர் பெற்றியிற்
> குற்ற முற்றிலெ னீயது கோடியால்

[இது எங்கள் தன்மை. அத்தன்மையைப் பெற்றுளயான் அதன்படி யொழுகியதால் யாதுங் குற்றஞ் செய்திலேன் என்பதைக் கருதிக்கொள்]

என வாலி எதிருரைத்தன யாவும் தக்கவே. எவரெவரையு மவரவர்க்குரிய விதிவிலக்குகளைக் கொண்டு மதிக்கவேண்டுமென்பதை மறந்து, மாநுடமுறையிற் பிழைத்ததென வோர் மர்க்கடத்தை விரைவுடன் வதைத்துவிடல் நேரிதன்று. ஆயினும் இதற்குமோர் மறுமொழியற்று இராமன் நின்றிலன். உருவத்தால் வாலி விலங்கெனத் தோன்றியபோதிலும் சிந்தையாலுஞ் செய்கையாலும் மனிதர்க்கியன்ற பகுத்தறிவு காட்டினானாதலால் அவன் மனிதப்பிறப்பிற்கு ஏற்ற விதிகளுக்குள் அடங்கவேண்டியவனா யிருக்கின்றானென்று இராமன் நிலைநிறுத்த முயன்றனனாய்,

> பொறியின் யாக்கைய தோபுல னோக்கிய
> அறிவின் மேலதன் றோவறத் தாறுதான்

[தருமவொழுக்கமாவது, ஐம்பொறிகளுக்கு இடமாகிய உடலைப்பற்றியதோ எனின் அன்று. புத்தியால் சீர்தூக்கித் தேர்கின்ற பகுத்தறிவைப் பற்றியதேயாகும்.]

என்னும் நீதியைச்செப்பி, முதலையால் மாயுமவ்வேளையில் உய்யும்வகை வேறிலையென மூலப்பொருளை அழைத்த வேழமும், சீதையின் துயரைத் தீர்க்குமாறு பொருது தீர்ந்த ஜடாயுவும் விலங்கென்றும் புள்ளென்றும் விளம்புதற் காகாமையையுங் காட்டி,

> நன்று தீதென் றியலெரி நல்லறி
> வின்றி வாழ்வதன் றோவிலங் கின்னிடை
> நின்ற நன்னெறி நீயறி யாநெறி
> யொன்று மின்மையுன் வாய்மை யுணர்த்துமால்

[நல்லது இது கெட்டது இது என்று தாரதரந் தெரிந்து கொள்ளும் நல்ல பகுத்தறிவு இல்லாமல் வாழ்வது அன்றோ விலங்கின் நிலையாகும். ஆனால் நிலைபெற்ற நல் நெறியில் நீ அறியாதது ஒன்றுமில்லை என்பது நீ இப்பொழுது பேசிய சொற்களின் சாமர்த்தியமே தெரிவிக்குமே]

என்று வாலியின் தரத்தினை அவன் வாய்மொழி கொண்டே சாதித்து

> தக்க வின்ன தகாதன வின்னவென்
> றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
> மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
> புக்க வேலவ் விலங்கும் புத்தேளிரே

[தக்கதுஇது தகாததுஇது வென்று நோக்கக் கருதாராயின் உயர்ந்தபிறவி பெற்றிருக்கும் மக்களும் விலங்கே யாவர். அவ்விதமே, மனுநெறியை ஏற்றுக்கொண்டுவிட்டால் விலங்குகளும் தேவர்கள் என்னும்படி ஆய்விடும்]

என்று சட்டமுங் கூறினான். இராமனும் வாலியும் வாதித்த சட்டங்களின் நுண்மை நமது சட்ட மன்றத்தின் முன்னணி நிற்கும் நியாயவாதிகளுக்கும் பெருமை தரும். இராமன் வகுத்துரைத்த இவைகளினின்று வாலி தப்புதற்கு வழியில்லை என்னும்படி காண்கின்ற தெனினும்,

> அவ்வுரை யமையக் கேட்ட
> அரிகுலத் தரசு மாண்ட
> செவ்வியோ யனைய தாகச்
> செருக்களத் துருத்தெய் யாதே
> வெவ்விய புளினு ரென்ன
> விலங்கியே மறைந்து வில்லால்
> எவ்விய தென்னை யென்றான்
> இலக்குவ னியம்ப லுற்றான்

[இராமன்செப்பிய இவ்வார்த்தைகளைப் பொருந்திக் கேட்ட குரங்குக்கூட்டங்களுக்கு அரசனான வாலி, "மேன்மை பொருந்திய செம்மையுடையவனே, நீ சொல்லும்படியே வைத்துக்கொள்வோம். எனின், போர்க்களத்தில் என்முன் கோபித்துநின்று எய்யாமல், கொடிய வேடர்களைப் போல் நீ விலகியே மறைந்து வில்லால் அடித்ததற்கு என்ன சமாதானங் கூற வல்லாய்' என்று வினவினான். அதற்கு இலக்குவன் பின்வருமாறு விடை பகர்ந்தான்]

கலைநலம் கழிமிகப் பெற்றபேர்க்கு எட்டாதது ஒன்று மில்லை. எத்துறையிலும் முற்றிய அறிவும் அவ்வதற்குரிய நுட்பமுங் காட்டலால் ஷேக்ஸ்பியர் கம்பர் அனைய புலவர்பெருமானார், தாமே அரசர்முதல்

அடிமையீருக இடைநின்ற பல்வேறு தொழிலின ராய் இருந்திருந்து அதனிற்குரிய திறமையிற் றேர்ந் தவ ராயினுரோவென வயிர்க்கப்பால ராகின்றனர். செய்கையால் சொல்லால் மற்று ஒருகுறிப்பினுல் ஒரு பொருள்பட நிகழ்த்திவிட்டுப் பிறகு அதற்கு நேர் எதி ரான காரணங்கள் கூறி வாதித்தலாகாதென்னும் மிக வும் நுண்ணியதோர் சட்ட விதியை(Estoppel) வாலி யிங்குக் கையாள்கின்றனன். ''ஐய,இராமனே,என்னை விலங்கெனக் கொள்ளலாகாதென்றும், நான் மாநட விதிகளுக்கு அடங்கினவனென்றும் காரணங்காட் டினுய். இது எவ்வாருயினு மாகுக. வேறென்று கேட்கின்றேன். அதற்கு இயலுமேல் விடைகூறுவாய். இக்காரணம் நீ கண்டுபிடித்தது என்மீது சுடுசரம் தொடுத்தற்கு முன்னரோ பின்னரோ. முன், விலங்கு களை மறைவிடமிருந்து கொல்லும் வேடரைப்போல் நீ நடந்துகொண்டதென்? ஆதலின் அச்சமயம் விலங்கின்பால் ஒழுகும் வழிமையே என்வயின் வழங் கிறைப். பின் அதை மறைத்து மனுமுறைப்படி என் மீது குற்றஞ்சார்த்துதற்கு உனக்கு வாயோ இனி யில்லை'' என்று வாலி வற்புறுத்தி சட்டத்தினின்று தப்புதற்கு வகை காணலிரு. தான் செய்து விட்ட செய்கையை மறைக்க இயலாது இருதலைக் கொள்ளி யெறும்புபோலலைந்த வாங்க வாலியின் வாதத்தில் இராமனை தோற்றனன் என்பதற் கைய மில்லை. அவ்வா றிவன் தோற்கவேண்டுமென்பதே கம்பரது உட்கருத்து. அத் தோல்வியினுலேயே இரா மனது தனிப்பெரும் மேன்மையை நிலைநாட்டக்கருதி யிருக்கின்றனர்.

நம்மாழ்வார் வைபவம்.

1-ம் பத்து. 2-ம் திருவாய்மொழி.

[212 வது பக்கத் தொடர்ச்சி].

5-ம் பாசுரம்:—

அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறை பற்றே

பொழிப்புரை :—“ பற்று அற்றதெனில் உயிர் வீடு உற்றது ’. உலக விஷயங்களில் வைராக்கியம் பிறந்து கைகூடினுல்(அதாவது இந்திரியங்களை நன்ருக ஜெயி த்துத் தபோ முயற்சியால் பலன் அடைந்தால்) அங்ஙனம் முயலுபவர்களுக்குத் தங்களுடைய பரிசுத்த ஆத்மசுவரூபம் ரசமாய்த் தோன்றிவரும்.

''உயிர் வீடு உற்றது '' என்ருல் தபசியின் ஆத்மா, பிருகிருதி சம்பந்தம்விட்டுத் தனி நிற்பது. உயிர் - ஆத்மா, “அது செற்று மன்னுறில் அற்று இறை பற்றே''

அந்வயம்:—அதைச்செற்று மன்னுறில் இறைபற்றி அறு—“இ''யைமாற்றி அந்வயிப்பதால் “பற்றிஅறு'' என்று ஆகும்.

பொழிப்புரை :—அந்த ரசயுக்தமான பிருகிருதி விடுபட்ட ஆத்மசுவரூபத்தை உபேக்ஷித்து (செற்று) அதிலகப்படாமல் ஸ்திரமான பகவத் தாஸ்யத்தில் நிற்கவேணுமாகில் ஈசனைப் பற்றி இதர விஷயத்தின் சங்கத்தை அறு.

1. வீடுயிர் உற்றது—பரிசுத்தாத்ம சுவரூபம் கைவந்தது. இறந்தகாலந் தேற்றத்தின் பொருட்டு வந்தது. இப்படிக்கு“உற்றது'' என்ருலும் ஆத்ம தரி சனம் வர யோக்கியமாகு மென்றே கருத்து.

2. யோகிக்கு விஷயசங்கம் விடற்குரியமனத்தேர்ச்சி ஸம்பவிக்குந் தருணத்தில் இரண்டுபாதைகள் ஸந்திக்குமிடத்தில் அவர் அகப்படுவார். ஒரு மார்க்கம் தவ முயற்சியால் பகவத்பக்திக்குக் கொண்டுசெல்லும். மற்றொன்று, ஆத்மதரிசனத்துக்கு உய்த்து அப்பிர யோஜனத்தில் இழியச்செய்யும். ஆகையால் இந்தச் சந்தியில் ஆத்மதரிசன ரஸத்தை உபேக்ஷித்து, நல் வழியும் உஜ்ஜீவிக்க ஹேதுவுமான பக்தியோக மார்க் கத்துக்கே ஏகுக என்று, வருமுன் காப்போராகி, நன் மையை வெகு ஆதரவுடன் கற்பிக்கிருர்.

பக்தியோகத்துக்கு அபேக்ஷிதமானதவமுயற்சியும், கீழ்சொன்ன ஆத்மதரிசனத்துக்கு வேண்டிய இந்தி ரியஜயம் கைகூடும் தவமுயற்சியும், ஒருபாடு ஒன்ருகவே இருக்க, அல்பசாரமாகிய ஆத்மதரிசனத் தில் தவமுயற்சியைச் செலுத்திச் சிற்சிலர் இழிகிருர் களே என்ன மூடர்களோ இவர் என்று, இம்மஹானு பாவன் இப்பிரபந்தத்தில் பின்னேரிடத்தில் பரிதாபப் படுகின்ருர். இந்த ஆத்மதரிசன விஷயத்தைப்பற்றி விரிவாக முன்பு (3வது வால்யூம், 2வது இதழ் 27வது பக்கம்) எழுதியுள்ளோம்.

6-ம் பாசுரம்:—

பற்றிலன் ஈசனும்
முற்றவும் நின்றனன்
பற்றிலையாய் அவன்
முற்றி லடங்கே.

பதவுரை.

முற்றவும் - எல்லாரிடத்திலும், ஈசனும் - பகவானும், பற்றிலன் - பற்று + இல் + அன் = சிநேக சுபாவனைக்கொண்டு, நின்றனன் - இராநின்றனன். ஆகையால், பற்றிலையாய் - சிநேகசுபாவமாய், அவன் - எம்பெருமானுடைய, முற்றில்-ஸர்வத்திலும், அதாவது எல்லாத்தாஸ விருத்தியிலும், அடங்கு - ஒடுங்கு-புகுந்துசொள்.

பொழிப்புரை:—ஈச்வரன், தன்னை அடுக்கின்ற எல்லாரிடத்திலும் ஸமமாயும் தான் எம்மாண்புடைய பரம்பொருளானுலும் ஒரேவிதமான சிநேக சுபாவமுடையவனையும் நிற்கிருர். இந்த 6-ம் பாசுரம் இந்தப் பத்தில் கண்ட “ஸர்வ ஸமத்துவம்'' என்கிற பகவத் கல்லியாண குணத்தை எடுத்துரைக்கின்றது.

அவன் பெரியோன்,நாம் அல்பர், அவனை அணுகத் தகுமோ நமக்கு, என்ற சங்கையை நிவர்த்திக்கும் பொருட்டு, அவன் தன்னைப் பற்றுகிற எல்லார்க்கும்

ஒக்க ஒரேவிதமான சிநேகத்தைப் பாராட்டுகிறவன், என்று கற்பிக்கிருர்.

7-ம் பாசுரம்:—

அடங்கெழில் சம்பத்து
அடங்கக்கண்டு ஈசன்
அடங்கெழில் அஃதென்று
அடங்குக உள்ளே.

அவதாரிகை:—ஈசன் எவ்வளவு மாண்பு உள்ளவனுலும் சிநேகபாவங் கொண்டு அவனிடத்தில் அடங்கலாமென்று முன்பாசுரத்தில் கற்பித்தார் “அவன் சுலபன்தான். ஆயினும், நமக்குப் பெரியோரிடத்தில் அணுகக் கூச்சமாயிராதோ'' என்ருல்; அக் கூச்சமும் அகல்வதற்குரிய ஒரு மனுேபாவத்தைச் சூழ்ந்து போதிக்கின்ருர்.

பதவுரை:—அடங்க - முழுவதும் நின்ற, எழில் - அழகுடைய, சம்பத்து - பரமபதம் என்கிற பதினுலு லோகங்களாகிற லீலாவிபூதியான ஜகத்தென்னும் இந்தச்சம்பத்து, அடங்க - முழுவதையும், கண்டு நன்குணர்ந்து; அஃதடங்க-அந்தச் சம்பத்தெல்லாம், ஈசன்-என்னுடைய ஸ்வாமியினுடைய, எழிலென்று அதிசயசொத்து என்று, உள்ளே - அந்த ஸம்பத்துக் குள்ளே, உங்கள் எஜமானனுடைய சொத்தை அநுபவிக்க உமக்கும் ஒருவாறு உரிமையுள்ளதென்று எண்ணி, அடங்குக - அடிமை செய்யுங்கோள்.

அந்த மனுேபாவம் ஏற்பட்டால் கூச்சமும் நாணும் உங்களைவிடும். பின்னர் எளிதில் நீங்கள் அணுகக்கூடும். ஒரு லக்ஷம் ரூபாய்க்கு மகாராஜா ரதம்வாங்கினுல் அதை நாம் தொட்டு அணுகக்கூசினுலும்,அதை ஓட்டுகிறவனும் அதைத்துடைப்பவனுந் தனதாகக்கூசாமல் அதில் பிரீதிவைத்து அணுகுவதால்,இதில்கற்பிக்கும் சூழ்ச்சியின் நுட்பத்தை யாவரும் நன்குணர்வார்.

8-ம் பாசுரம்.

உள்ளம் உரைசெயல்
உள்ள இம் மூன்றையும்
உள்ளிக்கெடுத்து இறை
உள்ளில் ஒடுங்கே.

அந்வயம்:—“உள்ள, உள்ளம் உரை செயல் இம் மூன்றையும்'' என்று அந்வயமாகும்.

பதவுரை.

உள்ள - ஏற்கனவே உங்களிடத்துள்ள, உள்ளம் உரை செயல் இம்மூன்றையும்-மனுேவாக்கு காயங்கள் மூன்றையும், உள்ளி-பகவான் விஷயத்திலேயே உப யோகிக்க உள்ளதென்று மனதால் ஆராய்ந்து தேறி, கெடுத்து - மற்றவிஷயங்களில் செல்லாது தடுத்து, இறையுள்ளில் - உமக்கு ஈசனுனவனிடத்திலே, ஒடு ங்கு - ஒடுக்கு. அதாவது, பகவத் தாஸியத்தில் நிலைநிற்கும்படி செய். கருத்துரை :— பக்வத்தாஸி யத்தில் இறங்கப்புதிதாக ஒருமார்க்கமும் கைப்பொரு ளும் தேடவேண்டா. உமக்கு முன்னேஉள்ள மனுே வாக்கு காயங்களை இதர விஷய சங்கத்திலிருந்தும் நிவர்த்திக்கவேண்டுமென்று புத்திபூர்வகமாய் உறுதி கொண்டு அவைகளை அவனிடத்திலேயே தாழ்வு பட மனுே நிச்சயத்தைச் செய்யுங்கோள், இதுவே வேண்டுவது, என்கிருர்.

9-ம் பாசுரம்.

ஒடுங்க வவன்கண்
ஒடுங்கலும் எல்லாம்
விடும் பின்னும் ஆக்கை
விடும்பொழுது எண்ணே.

அவதாரிகை :— மேல்பாட்டில் சொல்லிய தவ முயற்சி, எவ்வண்ணம் எக்காலத்தில் கைகூடும் என்பதை இப்பாசுரம் விவரிக்கிறது.

கருத்துரை :—மேல் செப்பியபடி அவனிடத்தில் மனுே வாக்கு காயத்தை ஒடுக்கினுல் அவனுக்கு ஈடுபாடு செய்யவேண்டுமென்கிற முயற்சியில் தடையொன்றும்வாராது - தடுக்கக்கூடிய பிரதிபந்தங்கள் விட்டுப் போம். “தொழுமின் தூயமனத்தராய் இறையும் நில்லா துயரங்களே'' என்பார். பின்னரும். அவனை அணுகும் காலம் உம்முடைய ஆக்கைகளை விட்டவுடனே நேரிடும், இத்தனைதான் காலவிளம்பம்; என்பது கருத்து.

10-ம் பாசுரம்.

எண் பெருக்கு அந்நலத்து
ஒண்பொருள் ஈறில
வண்புகழ் நாரணன்
திண்கழல் சேரே.

அவதாரிகை:—எந்த தேவதையை என்னகாரணத்தினுலே வழிபட வேண்டுமென்பதை உரைக்கிருர்.

பதவுரை.

எண்பெருக்கு - வெகுபெருக்கான சங்கியையாலும் அளவிடக்கூடாத, அ - வேதப்பிரமாணங்களில் எல்லோரும் அறிய வெளிப்பட்ட, நலத்து - ஞானம் ஆநந்தம் முதலான குணங்களையுடைய, ஒண் - ஒளி பொருந்திய ஸர்வ விலக்ஷணமான, பொருள்-சூக்ஷ்மமான ஆத்மவஸ்துக்களை உடையவனை,ஈறில்-முடிவு இல்லாத (எப்போது மழிவில்லாத), வண்புகழ் - கல்யாண குணங்களைஉடையவனை, நாரணன் - ஸ்ரீமந் நாராயணனுடைய, திண்- ஆசிரதர்களை இரக்ஷிப்பதில் ஒருக்காலும் மாறுபாடு இல்லாத, கழல்- திருப்பாதங்களை, சேரே - சேர்.

கருத்து - எல்லா ஆத்மாக்களுக்கும் ஸமமான ஹிதனுனதாலும் ஈசனுனதாலும்வெகுசிரேஷ்டமான ஆநந்தாதி குணங்களை உடையவன் ஆனதாலும் நாரணன் கழல்சேர், என்கிருர். வண்புகழ் நாரணன்-உலோகங்களுக் கெல்லாம் ஆதாரமாயும் அந்தர்யாமியாயும் உபாயமாயும் நிற்கிற எம்பெருமான் சர்வ கல்யாணகுணங்களையும் உடைய நாராயணன்.

11-ம் பாசுரம்.

சேர்த்தடத் தென்குரு
கூர்ச்சடகோபன் சொல்
சீர்த்தொடை யாயிரத்து
ஓர்த்தஇப் பத்தே.

பதவுரை.

சேர் - சேர்ந்த, தடம்- தடாகத்தை உடைய,தென் குருகூர் - அழகான குருகூருக்கு நிர்வாஹகரான, சடகோபன் - மனிதரை மோஹத்துக்கும் மருளுக்கும் உள்படுத்தக்கூடிய “சடம்'' என்கிற வாயுவை ஜெயித்தவரான ஆழ்வார், சொல் - சொன்ன, சீர் - குணங்கள், தொடை - சந்தர்ப்பங்கள், ஆயிரத்து - இவைகளடங்கிய ஆயிரத்தில், இப்பத்து - இந்தத் தசகமானது, ஓர்த்த - பகவத் குணங்களை உணர்ந்து சொல்லின.

குறிப்பு:—நம்மாழ்வார் மோஹமும் அஞ்ஞானமும் நீர்ந்தவராய்எம்பெருமானுல்“மதிநலம்'' அருளப் பெற்றவராதலின், நாராயணனை வழிப்படுங்கோள் என்று அவர் தெரிந்துஉரைக்கும் இப்பத்து அவனை வழிபட்டு நற்கதி அடைய விரும்புவோர்க்கு அவசியமாய்ப் படித்தறிதற்குத் தகுந்தது என்பது கருத்து.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

நடத்தை (Behaviour).

206வது பக்கத் தொடர்ச்சி

இயற்கைச் செயனிலை ஒரு மனநிலை யாகும்; ஓர் உடல்நிலை யாகும். மனநிலை மூன்று தன்மைகளோடு விளங்குகிறது பொருள்களை அறிகின்றோம்; அதை அறியும்போது நாம் வேண்டியபொருளாயின் களிக்கின்றோம்; வேண்டாப் பொருளாயின் வெறுக்கின்றோம். அதனை அடைய நம் மனம் பதைபதைக்கின்றது. அறிதல், அறிவுநிலை (Cognition); விருப்பும் வெறுப்பும் உணர்ச்சிநிலை (Affection); பதைபதைத்தல் இயற்றிநிலை (Conation). மனநிலை இம் மூன்றுஇயல்புகளோடு விளங்குதலால், இயற்கைச்செயனிலையும் இம்மூன் றியல்புகளோடும் விளங்குதல் வேண்டும். பதைபதைக்கும் இயற்றிநிலையை முன்னரே கண்டோம். உணர்ச்சிநிலையை மேலும் சிறிது இனி ஆராய்வோம்.

உணர்ச்சிநிலையைப் பின்னர்ப் பெரிதும் ஊன்றி ஆராயவேண்டி இருப்பதால் இங்கு, இயற்கைச் செயனிலையினை அறிந்துகொள்வதற்கு வேண்டிய அளவே அதனை ஆராய்வோம். கீழ்நிலை உயிருளிகளை இதுவரை ஆராய்ந்தோம். மேனிலையில், தமது குழவிகளுக்குப் பாலூட்டி வளர்க்கும் உயிருளிகள் விளங்குகின்றன. இவற்றைப் பாலி (Mammals) என வழங்கலாம். மக்களும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களே. இந்தப் பாலிகளிடத்தில்தான் இவ் வுணர்ச்சிநிலை சிறந்து விளங்குகின்றதாகி நாம் அதன் தன்மையைத் தெளிவாக உணர்ந்துகொள்ளக்கூடிய வகையில் திகழ்கின்றது. நம்முடலமைப்போடு ஒத்திருக்கும் உயிருளிகளைப்பற்றிப் பேசும்போதுதான் 'வெகுள்கின்றது', "அன்புபாராட்டுகிறது" என்று கூறுகின்றோம். பூச்சிகளைப் பற்றிப் பேசுகையில் அத்தகைய சொற்களைப் பயன்படுத்துவதில்லை பறவைகளைப்பற்றிப் பேசுகையிலுங்கூடச் சிற்சில இடத்துத்தான் மெய்ப்பாட்டைப்பற்றி நினைக்கின்றோம். மற்றைய இடத்தில் எல்லாம் அவற்றின் செயல்களை இயற்கைச்செயல்கள் எனப் பேசிவருகிறோம். பாலிகளின் செயல்களைக் கண்டபோதும், பயனற்ற செயல்களாகத் தோன்றினால் இயற்கைச்செயல்கள் என விட்டுவிடுகின்றோம். நாயானது பாயினைப் பிறண்டுகிறது, புரள்கிறது. இவற்றை இயற்கைச்செயல் எனக் கூறுகின்றோம். அயலான் ஒருவன் நம் வீட்டிற்குள் நுழைவதுகண்டு நமது நாய் குரைக்கும்போது, வந்தவனைக் கண்டு அது வெகுள்கிறது என்கிறோம். அவ்வாறு குரைப்பதுகண்டு நாம் தடிகொண்டு தலையை நொறுக்கச்சென்றால் பின்னங்கால்களி னிடையே வாலைத் தொங்கவிட்டு நகர்வதுபோல மெல்லச் செல்கின்றது. அப்போது அது அஞ்சுகின்றது, என்கிறோம். தாய்நாயானது தனது குட்டிகளை நாவால் நக்கி விளையாடுகின்றபோது, அன்பு பாராட்டுகின்றது என்கிறோம். அன்பு வெகுட்சி அச்சம் என்னுமிவை உணர்ச்சிநிலையைப் பொருத்த மெய்ப்பாடுகள். நாம் அவ்வுணர்ச்சிநிலையில் நின்றால் எவ்வாறு நடந்துகொள்வோமோ அவ்வாறே அந்நாயும் நடந்துகொள்வதால், அப் புறநிலையைக் கொண்டு அகநிலையைத் துணிந்து கூறுகின்றோம். அதன் உணர்ச்சிநிலையும் நம் உணர்ச்சிநிலையும் ஒன்றெனவே உட்கொண்டு உலகம் இவ்வாறு பயங்கிவருகின்றது.

இவ்வாறுதான் பிறமக்களி னுணர்ச்சிநிலையையும் உய்த்துணர்ந்து துணிந்து கூறுகின்றோம். அடர்ந்திருண்டதொரு காடு — அதிலே ஒரு கிளைவழி ஓடுகின்றது. அக்கிளையின் இடையே நடுக்காட்டில் ஒருவன் நிற்கின்றான். கட்டியிருப்பதோ கிழிந்த துணி. பட்டினி கிடப்பவன்போலத் தோன்றுகிறான். ஆனால் உடல் உரங்கொண்டவன் அவன் எதிரே ஒரு வழிப்போக்கன் நடந்துவருகிறான் நாம் தொலையில் மரத்திலேறி மறைந்து பார்க்கின்றோம். வழிப்போக்கன் ஏழையின் அருகே வந்ததும் இரவலன் ஏதோ சில சொல்கின்றான். கையேந்தி நிற்கின்றான். வழிப்போக்கன் தன் மடியில் கையிட்டுச் சில செப்புக்காசுகளை ஏழைகையில் கொடுத்துவிட்டு மேலே நடந்துசெல்கின்றான். இவன் செயலை என் என்பது? அவன் கை ஏந்தவே இவன் காசு ஈந்தான் எனலாம். வழிப்போக்கன் செய்ய எண்ணியதுஎன்ன? காசு எடுத்துக்கொடுப்பதே இவன் செய்கைக்குறிப்பு (Intention) என நாம் அறிவோம். ஆனால், இவனை அவ்வாறுசெய்யத் தூண்டியது யாது? அவனுடைய உள்ளக்குறிப்பு தான் என்ன? செய்கைக் குறிப்பிற்கும் (Intention) உள்ளக் குறிப்பிற்கும் (motive) இடையே இருக்கின்ற வேற்றுமையை நாம் அறிதல்வேண்டும்.

நள்ளிருளில், மக்கள் புழக்கமில்லாத ஒரு மூலையில், உடல்கொழுத்த ஒரு கள்வன், தனியே கள்ளக்கோல்கொண்டு சுவரை இடிக்கின்றான். காவலாளி அவ்வழியாக வருகின்றான். இடிக்கின்ற ஒலிகேட்டு அவ்விடத்திற்கு வந்து அக் கள்வனைக் கையும் பிடியுமாகப் பிடித்துக்கொள்கின்றான். கையை முறுக்கித் திமிரிக்கொண்டு தப்பி ஓட முயல்கின்றான் கள்வன். கையை விடாதிருப்பது கண்டு, கள்ளக்கோலால், காவலாளியின் மண்டைமேல் அடிக்கின்றான். மண்டை உடைந்ததும் குருதிவெள்ளம் பொங்கவே காவலாளி கீழ் விழுகின்றான். கள்வன் ஓட்டம் பிடிக்கின்றான். அக் கள்வனது செய்கைக்குறிப்பு என்ன? அவன் மண்டையை உடைத்தல்தான்; ஆனால், காவலாளியைக் கொல்லவோ எண்ணினன். இல்லை! இல்லை! அஞ்சி ஓடித்தான் பிழைக்கவே எண்ணினன். ஆதலினால் அவனுடைய உள்ளக்குறிப்பு அச்சமேயன்றிக் கொலையன்று.

மேலே நாம் கண்ட வழிப்போக்கனது உள்ளக்குறிப்பென்ன? எதிர்வந்த ஏழையின் வறுமைகண்டு மனம்நைந்து இரக்கத்தால் காசுகொடுத்திருக்கலாம். இரவலனது உடலுரத்தையும், தான் நடுக்காட்டில் தனியேநிற்பதையுங் கருதி அச்சத்தால் கொடுத்திருக்கலாம். அல்லது தற்பெருமைக்காகவும் கொடுத்திருக்கலாம். உள்ளக்குறிப்பினை அச்சம், இரக்கம், தற்பெருமை என வழங்கிவருவது இதனால் வெளியாகின்றது. ஆனால் அச்சம் முதலியனவோ மெய்ப்பாடுகள் (Emotion). வழிப்போக்கன் செயல்களை ஊன்றிப் பார்த்திருந்தால் அவனுடைய உள்ளக்குறிப்பினைத் துணிந்து கூறலாம். ஏழையைக் கண்டதும் இவன் முன்னும் பின்னும் பார்க்கிறான். கை நடுக்குகிறது, சொற்கள் குழறுகின்றன, முகம் வெளுக்கின்றது. காசைக் கொடுத்துவிட்டு விரைந்துநடந்து செல்கின்றான். இச் செயல்களைக் கண்டால், அச்சமே அவனுடைய உள்ளக்குறிப்பென உறுதி கூறுவோம். காசு கொடுத்தும், திருமித்திருமி ஏழையைப் பார்த்துக்கொண்டே போகிறதைக்கண்டால், இரக்கத்தால் ஈந்தான் எனத் துணிந்துகூறுவோம். தன்னைத்தானே பெரியவன் என உட்கொண்டு, செருக்குடன் தலைநிமிர்ந்துசென்று காசை வீசி எறிவானனால் பெருமிதத்தால் கொடுத்தானென உய்த்துணரலாம். மேலும், வழிப்போக்கனை நேரில் கண்டு கேட்போமானால், அவனும் நாம் எண்ணியபடியே கூறலாம். ஆனால் சிற்சில பொழுது சிறிதுமாற்றியும் அவன் கூறலாம். அதனால் அவனைப் பொய்யன் என்று இகழ்தல் கூடாது. உள்ளக்குறிப்பை உறுதியாகக் கூறமுடியாதன்றோ?

இவ்வளவும் கூறியமையால் உலகவழக்கில், மெய்ப்பாடும் உள்ளக்குறிப்பும் ஒன்றாகவே விளங்குகின்றன என்பது தெளிவாகின்றது. அஃதன்றி, உலக வழக்கு, மெய்ப்பாட்டினையும் இயற்கைச்செயலையும் ஒன்று எனவே வழங்கிவருகின்றது. ஆனால், அச்சம் என்பது மெய்ப்பாடு; மற்று அஞ்சி ஓடுதல் என்பது இயற்கைச் செயல் இவ்வாறுதான் மற்றையவற்றைப்பற்றியும் உலகில் பேசிக்கொள்கின்றோம். நம் உடலமைப்போடு ஒற்றுமையுடைய உடலுள்ள உயிருளிகளின் நடத்தையைப்பற்றிப் பேசும்போது மெய்ப்பாட்டினைத் துணிந்து கூறுகின்றோம். வேற்றுமையுடைய உயிருளிகளாகிய பூச்சி முதலியவற்றைப் பற்றிப் பேசும்பொழுது இயற்கைச்செயனிலை எனக் கூறிவிடுகின்றோம். இயற்கைச்செயலுக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ளதோர் ஒற்றுமைநயத்தினை இவ்வுலகவழக்கு விளக்கி வைக்கின்றது. இயற்கைச் செயனிலை செயலுறும்போதுதான் மெய்ப்பாட்டைத் துய்க்கின்றோம்.

ஆச்சரிய சூடாமணி

[211-வது பக்கத் தொடர்ச்சி.]

3. மாயாசீதை அங்கம்

இராவணனும் சூர்ப்பனகையும் சாரதியும் தேரில் வருகின்றனர்.

ராவணன்:- உயிருடன் யானிருக்க ஒருமானிசனை புக்கென் பின்னவளைத் துன்புறுத்தத் துணிந்தனன்! அஃதின்றே ஒழிந்திடுக; கனவனைக்கொன்று போக்கியக் கொவ்வைவாய்ச் சீதையை வௌவுவேன் யான். பாக, விரைவிற் குதிரைகளைத் தூண்டுக.

சூதன்:—சிரஞ்சீவியே, கட்டளைபோலவே. (வேகமாக ஓட்டுகிறான்)

சூர்ப்:—அண்ணா, கோபிக்கலாகாது. புரந்தரனைப் புறங்கண்டு இகழ்கின்ற தங்களுக்கு அம்மனிதனுமொரு பொருளோ! சோகத்தின் மிகுதியால் சீதை தன் னின்னுயிரைத் துறக்காவண்ணமே, அவளைக் கைக்கொள்வோம். அன்னவட் கோருயிர் இவ்விராமனே யன்றோ?

சூதன்:—(தனக்குள்) நல்லொழுக்கந் துறந்துவிட்ட பெண்கள் தம் புன்தொழிலில் காட்டுகின்ற புத்திக்குப் புலவர்தம் வித்தையெல்லாம் நிகராமோ!

ராவ:—(சிறிது ஆலோசித்து) இவள் கூறியது உண்மையே! போரில் கோபத்துடன் ராமனைக் கொன்று வன்மையுடன் சீதையைக் கைபற்றினால் கொழுநனை இழந்த அருந்துயர்க் காற்றாது, என்வயின் பயின்றறியா அவள் தானாகவே உயிர் விட்டுவிடுவாள். தவிர, தேவர்களை வென்று புகழ்கொண்ட இக்கைகள் மனிதனான இராமனைக்கொல்ல ஆயுதத்தைத் தொடுமோ?

சூதன்:—நீடு வாழ்வீர், பரிமயஞ் செல்வன்தன் பச்சைப் பரிமாவினுஞ் சிறந்த நம் குதிரைகள் உடல் நடுங்கிக் கண்ணீர் வடித்து மனங்கலங்கி அந்தரத்தில் காரணமின்றியே கா விடுகின்றன.

ராவ:—சூத, போகவேண்டியவிடம் இராமனது பர்ணசாலையே; கைலைக்கன்று.

சூதன்:—நீடுவாழ்வீர். என்கடமையில்குற்றமில்லை. இனித் தங்கள் விருப்பம்போலவே; (தனக்குள்) இதோ விட்டுவிட்டேன் நல்லோர் ஒழுக்கத்தையும் கடிவாளத்தையும். (அனைவரும் தேரின் விரைவைப் பார்க்கின்றனர்.)

சூதன்:—சுவாமீ! தேரின் விரைவைப் பார்த்தீர்களா? மேகக் கூட்டங்கள் நீருமிழ்ந்து வரிசையாகின்றன; தேரிற் கட்டியிருக்கும் மணித்தொடர்கள் விரைவினால் ஒலிக்கவில்லை. குதிரைகளுக்கு அலங்கரித்திருக்கும் சாமரங்கள் காற்றிலசையாமல் இரகசியஞ் சில சொல்வ போன்றன. விருப்புடன் தாங்கள் போகுமிடம் தங்களையே நோக்கி வருவதுபோ லிருக்கிறது.

சூர்ப்:—பாகன் சொல்வது உண்மையே. நாம், இதோ ராமன் தவஞ்செய்யும் வனம் வந்தோம்.

ராவ:—உனக்கோர்ஊறுசெய்த அவ்விராமனுடைய உயிர்க்காதலி எங்கே!

சூர்ப்:—(சுட்டிக்காட்டி) இதோ! இவளே அவள்.

ராவ:—(சீதையை நோக்கி ஆச்சர்யத்துடன்) மூவுலகத்தாருள்ளும் அழகுள்ளவள் இச்சீதையே; அப்ப, ஆச்சரியம், ஆச்சரியம். அரம்பைமார்களுடன் சேர்ந்து இந்திராணி சிறையிலிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்; திக்குவிஜயஞ் செய்துவரும்போது பல பெண்களைப் புஷ்பவிமானத்திலேற்றி ஒன்றாகக் கொண்டுவந்திருக்கிறேன்; கைலையைப் பெயர்த்தெடுக்கும்போது நடுங்கின பார்வதியையும் பார்த்திருக்கிறேன். அவர்களெல்லாரும் இவளைப்போன்ற அழகுடையவரல்லர்; அப்ப! வெகுகாலங் கழித்து என் கண்கள் பயனடைந்தன; (நினைப்பினால் வருந்தி)

அழகிற்கு ரசாயனமருந்தான இச்சீதையைப் பல முறை பார்த்ததனால் மனதை நிறையச்செய்யும் எனது தீரமான ஏனைய கண்களும் பயனடைந்தன. நான் இவளது இளந்தளிரொத்த மெல்லிய மேனி முழுதையும் புல்கி வீரவடுவுற்ற இவ்விருபது புயங்களையும் எப்பொழுது களிப்படைவிப்பேன்.

சூர்ப்ப:— (தனக்குள்)என் எண்ணம் நிறைவேறியது.

ராவ:— (இலக்குமணனைக் காட்டி) மெய்யில் சட்டையணிந்து அம்புறுத்தூணியைப் புறத்தில் தூக்கி நாண்பூட்டின வில்லைக் கையில்கொண்டு சீதையைச் சுற்றிவந்து காத்துநிற்கின்ற இளங் காளையொத்த இவ்வொருவன் யார்?

சூர்ப்ப:—(காதில்) இவ்வாறு

ராவ:— அப்பப்பா! இராமனே தன் அம்பால் முதலில் தாடகையைக் கொன்றான். இவனே உன்னிடம் கத்தி செலுத்தினான். என்னே மானிடரின் ஆயுதவன்மை! (திரைக்குள் மான் மேயும் சத்தம் உண்டுசெய்தல்) ஏ! என்ன வேகம்

சீதை:—இன்னும் என் கணவன் அம்மானின்பின் செல்கின்றாரா?

ராவ:—இது யாருடைய குரல்?

சூர்ப்ப:—இதுவே அந்த இராமனுடையது.

ராவ:—(திரும்பிப்பார்த்து) இவனே கண்டோரிரங்கக் கடுந்தவம்புரியு மவ்விராமன்! (மூர்ச்சையடைந்தான்)

சூதன்:—(தனக்குள்) இராமனென்பவன் தாமரைக்கண்ணனான திருமாலுமல்லன்; சந்திரனைச்சூடும் சிவனுமல்லன்; ஆனால் அரக்கரைக்கொல்ல அயோத்தியிற் பிறந்த மருந்திவனென்று மாரீசன் சொன்னது உண்மையே

ராவ:—பாக, உன்னைப்பார்த்தால் பயந்தவன் போலத் தோன்றுகிறதே!

சூதன்:—ஆம், அடியேன் பயந்துவிட்டேன்; இப்பொழுது நாம் மனிதரைப்போல இருக்கின்றோம்; இராமன் அரக்கனைப்போல இருக்கிறான்.

சூர்ப்ப:—அண்ணா, இவளுடைய உருவம் ஒள்ளிய அணிகலன்களுடன் எவ்வளவு அழகாகக் காணப்படுகிறது!

ராவ:—இவளுக்கு ஆபரணமெதற்கு; இயற்கையில் அழகான பொருள்களுக்கு அழகுசெய்யவேண்டியதில்லை. மதியின் கலையைத் துடைப்பதுண்டா; கௌஸ்துபமணிக்குச் செம்மை யூட்டுவதுண்டா?

சூதன்:—சுவாமி, அடியேனும் சிறிது பேச விரும்புகிறேன்.

ராவ:—நான் போதற்கு யாது தடை!

சூதன்:—சிறந்த ஒழுக்கமுடைய இவள் கணவனையே கடவுளாகக்கொண்ட கற்புடையவளெனத் துணிகின்றேன்.

ராவ:—நீ எப்படி யறிந்தாய்?

சூதன்:—சுற்றத்தாரைத் துறந்து மனவுறுதியுடன் காட்டில் இவனுடனேயே களித்துக்கொண்டிருக்கின்றாளே!

ராவ:—அடே அறிவிலி, ஆயினும் என்! பெண்பாலருடைய புத்தியானது சிறந்தபொருளைக்கண்டால் களிப்படையுமடா! இச்சீதை மனித ராமனைப் பொருட்படுத்தாமல் ஆகாயகங்கையின் மரகதக் கரையில் என் மடிமீதமர்ந்து பொற்றாமரை வாசங்கலந்த தெய்வக்காற்றேற்று,பயந்தனளாயருகுநிற்கும் புலோமசைபால் கடைக்கண் பார்வை போக்கிப்போக்கித் திட்டமாக என்னோடு முற்றும் நிறைந்த இன்பம் நுகரப்போகிறாளடா!

சீதை:—(நிமித்தங் குறிப்பிட்டு)சிறுவ இலக்மணா! என் வலக்கண் அடுத்துவரும் ஆபத்தைக் அறைகின்றதே!

இலக்ம:—அம்ம, தாயத்தார்க்குப் பொதுவான பொருளொன்று மில்லாமல் காடடைந்த நமக்கு ஆபத்தேது? நிலையற்ற செல்வ மிருக்கு மிடத்தன்றோ நிலையுள்ள பகையுண்டு.

சீதை:—சிறுவ, நீங்கள் கொன்ற கரதூடணதியருக்குப் புகழ்பெற்ற இருபதுகைகளையுடைய ஓர் தமையனுண்டென்று இருடிபத்தினியர் கூறக் கேட்டிருக்கிறேன்.

ராவண:—அம்ம! என்னை இவள் முன்னரே கேட்டிருக்கின்றாள்—என்பாக்கியம்.

இலக்ம:—அன்னாய், அவனைக்குறித்துப் பயப்படவேண்டாம்.

ராவண:—இவன் என்ன சொல்லப்போகிறான்!

இலக்ம:—திறமைக்குப் பல கைகள் வேண்டுவதில்லை நினைத்துப்பாருங்கள். இந்த இராவணனை வென்ற ஆயிரங்கைகளுடைய கார்த்தவீரியார்ச்சுனனென்ற அரசனுடைய தோள்களை மரம் வெட்டுவது போல ஓர் அந்தணனானவன் ஸமித்து வெட்டும் பரசு கொண்டு வெட்டினான்.

ராவண:—அடே மனித! இவ்வார்த்தை உனக்கு நினைவிருக்கட்டும்.

(திரைக்குள்) ஐயோ! இலக்மணா!

சீதை:—ஓ, நாதனுடைய குரல்போலிருக்கிறதே!

இலக்ம:—அம்ம, அண்ணன் பயந்து இவ்வாறு தளர்ந்து கூப்பிடமாட்டார்!

சீதை:—நீ என்ன ஊகிக்கிறாய்!

இலக்ம:—மாயை யென்று.

ராவண:—ஓ, இவன் மிகுந்த தைரியசாலியே.

சீதை:—அறிவிலியே! அம் மாயையிலிருந்தும் காப்பாற்றவேண்டியது தானே.

இலக்ம:—காப்பாற்றப்படவேண்டியவன் எப்படிக் காப்பாற்றுவான்.

(திரைக்குள்) ஏன் தாமதிக்கிறாய்!

சீதை:—துஷ்ட, ஆபத்தடைந்திருக்கும் தமையனுடைய கூக்குரல் கேட்டும் அலக்ஷியஞ் செய்யும் உன்னைப்பெருந்தகைப்பூதேவி எவ்வாறுபொறுக்கின்றாள்.

இலக்ம:—அம்ம, தாங்கள் அப்படியே தீர்மானித்து விட்டீர்களா?

சீதை:—இலக்மணா, கேள். நீ விரைவிற் போகவில்லையா! பெண்பாலரில் பிறனைச் சென்று சேர்பவள் திருமகளே யன்றி நானல்லள். நானே அவ் வொருவனையே -

இலக்ம:—(காதைப் பொத்திக்கொண்டு)இப்பாவம் தீர்ந்திடுக; இப்பாவம் தவிர்ந்திடுக! ஆழ்ந்த அறிவுடையோர்க்குத் தலைமையான தாங்கள் மனங்குலைந்து ஆராயாமல் என்னை இகழ்ந்ததால் தங்களுக்குப் பெருந்தீங்கு நெருங்கிவிட்டது திண்ணம். இன்னல் வரும்போது இயற்கைமதியும் மாறுகின்ற தன்றோ?

ராவ:—ஏடா, நீ அறியாய்! வனவாசத்தால் துயரடைந்த இவளுக்குச் செல்வம் வந்திருக்கின்றது.

(திரைக்குள்) ஐயோ! யான் தொலைந்தேன்.

சீதை:—இலக்மணா கொடியோய், கேள்! இப்பொழுது நான் உன்முன் உயிர்விடப்போகிறேன்; பிறகு உன்விருப்பம் நிறைவேறுது நீ தமையனிடம் போகப் போகிறாய்!

இலக்:—நல்லறிவால் யோசித்துப் பாருங்கள்! இப்படிச் சொல்கின்றீர்களே! ஆராய்ச்சியின்றி மேல்வருவன எண்ணாமல் பிறர் புத்தியையுங்கொள்ளாத நிலையற்ற பெண்பிறப்பை வெறுக்கிறேன்.

சீதை:—நீயே நல்லவனாயிரு.

இலக்ம:—மாயையில் வல்லவரும்,புதிய பகைவருமான அரக்கர்களது உறைவிடமாகிய இக்காட்டில் தமையன் கட்டளையைப் பொருட்படுத்தாமல் அறியாமையால் வேறுபட்ட தங்களை எவ்வாறு தனியாக விட்டுச் செல்வேன்.

சீதை:—பெண்களின் கற்பைக் காப்பது அம்புகளல்ல, அவர் தவமே.

இலக்ம:—தெய்வமேயறியும்: தேவர்களே சாக்ஷி.

சீதை:—அப்படியே

இலக்ம:-(வணங்கி)தங்களுக்குவந்தனம்(போனான்)

சூர்ப்ப:— அண்ணா! பார்! பார்!

சீதை:—இலக்மணன் என்கணவனிடம் போயிருப்பானா!

(திரைக்குள்) சீதே! நீயும் என்னை வெறுத்தனையோ

சீதை:—ஐயோ,பெரும்பாவி அல்லவோநான். என் கணவன்குரல் வந்தவழியே தேடிச் செல்கின்றேன் (புறப்படுகிறாள்)

சூர்ப்ப:—அண்ணா, பார்! போற்றுவாரற்ற இரத்தினம் தானே போகின்றது, பார்!

ராவ —இச்சமயம் வாளாவிருத்தல் கூடாது; யான் இராமனைப்போல் வடிவெடுத்துக்கொண்டு பாதிவழியில் இவளைத் தடுக்கின்றேன்.

சூர்ப்ப:—அண்ணா, சொல்வது உண்மையே! இராமன் திரும்பிவரும்வழியில் நானும் சீதையின்வடிவுடன் போய் அவனைத் தாமதப் படுத்துகின்றேன்.

ராவ:—நல்ல யோசனையே!

சூர்ப்ப:—இதைவிட நான் செய்யவேண்டியதென்ன! (போனாள்)

சூதன்:—சுவாமி, அடியேன் இப்பொழுது என்ன செய்யவேண்டும்.

ராவ:—(காதில்) இவ்வாறு-

சூதன்:—கட்டளைபோலவே-(தனக்குள்) இதுவும் நான் செய்யவேண்டி வந்ததே. அப்ப! யஜமானனுடைய உணவு இன்னாமை யுடையதே. (போனான்)

இலஞ்சிப் பாவை.

9. கரிக்கோற் சின்னம் சுற்றிய கோலம்.

214வது பக்கத் தொடர்ச்சி.

மூன்பின் பாராது சென்ற மணிவண்ணனது காலடியரவம் கேட்கும்வரை அவனதன்னையின் கண்களில் நீர் கலங்கவில்லை. சேய்மைக்கண் அவன் அகன்று அவ்வரவமும் அடங்கவே, அடங்கொணாத் துயர்கொண்ட தாயின் அடிவயிற்றினின்றும், அப்பா, என்னும் அவலிப்புண்டாயிற்று. "யாருக்கென்றியா னழுவேன்! மனங்கோணாமலென்னைப் புரந்தொழுகிய என் மன்ன னிறந்ததற் கழுவனோ? பால்மணம் மாறாப் பாலகன் இவ்வமயம் என்னைத் துறந்து போர்முகநோக்கிப் போந்ததற் கழுவனோ? இயற்கை உணர்வினாய இறையே! வரம்பில் அருளுடைய வள்ளால்! ஆதரவற்ற என்னருஞ் சிறுவனுக்குத் துணை நீயே! அவ னின்னுயிர்க்கு ஓர் தீங்குமுறாமல் காத்தளித்தல் உனது கடன். இறந்துபட்ட மணாளனன்தன் இன்னுயிரை அறக்கடவுளிட மிரந்துபெற்றாள் முன்னொரு மடவா ளென்பர். அத்தகைய பெருஞ்சிறப்பு வாய்க்கப்பெறாத யான், என் சிறுவன் பொருட்டுச் செய்யும் இச் சிறு விண்ணப்பங் கேட்டருளே. யான் கூவியிரக்குமிப் பிச்சையோ எனதாவியை யன்று. பெருந்திறலென் தலைவனது புகழினை நாட்டவல்ல இந்நம்பி மணிவண்ணன் எனது பேரைப் புகலப் பிழைத்திருக்க அருள்புரியுமாறு மன்றாடுகிறேன்" என்றழுதாள். மதனகோபாலனது கலங்காத கன்னெஞ்சமும் கன்றுபிரி காராவின் துயருழந்த அவளது ஆற்றாமைக்கு இரங்கிற்று. அவனது பரிவைக்கண்ட மாதராள் "அப்பா! என் நிலைமையைக் கண்டாயோ? உனது பணியினைத் துணிவுடன் செய்யத்தக்க என்னிறை இருக்கும் தன்மையைப் பார்! அடியற்ற மரமென அவர் விழுந்து கிடப்ப, இவ்வமயம் இந் நாட்டில் எனக்குப் பற்றுக்கோடாய் நிற்பவை சிறுவிழுதுகளே. ஆயினும் நண்ப, ஆண்மகனாய நீ இக்காலை எம்முடன் வருந்துவது தகாது. நான், எனது முன்னைவினைப் பயனை நுகரக்கடவேன். நீ எழுந்திரு! திக்கற்ற என் குழந்தைகளுக்குத் தெய்வம் துணைநிற்குமேனும், இடருற்றபோது என் கணவனருகு நின்று உடைவாள் உருவி நீ முன் உதவி புரிந்தாங்கு, போர்க்கோலங் கொண்டு நமது மரபினரைத் திரட்டி' என்னருமைச் செல்வன் உயிரைக் காத்துநில். இறந்தவற்காக இளைஞரும் பெண்களும் இரங்குவோம். நீ எழுந்து செல்" என்றாள். என்னலும், அழுகை கெழுமியவவ்வில்லத்தில் புதுவகை ஒலி யொன்று எழும்பிற்று. போர்க்கருவிகள் நிலனுற வெழும் ஓசையும், போர் முரசம் பொங்கு மோதையும், வீரரை ஒருங்குசேர அழைக்கும் சும்மையும், தலைமயங்கி ஓம்மென் றொலிதர,

வில்லெடுப்பாரும், போர்க்கோலம்பூணுவாரும், பட்டயந் தீட்டுவாரும், கச்சிறப்புபாருமாய் வீரரெங்கும் விரைந்தேகினர். இவ் வாரவாரத்தால் தன் கணவனே உயிர்த்தெழுந்து படையைத் திரட்டல்போ லெண்ணிய அவள் இடுங்கிய கண்களில், ஒரு சிறைச் சன்னதம் பூத்ததேனும், சரேலென அது மறைய, இயற்கையாய துன்பந் தோன்றிக் களகளென உதிர்ந்தன கயற்கண் ணாலியே.

தூமகேதுவெனத் தோன்றிய வச்சின்னம், குறிஞ்சியு முல்லையுமாய நிலங்களைக் கடந்து சென்றது. மணிவண்ணனுக்கு இளைப்பாறுதல் என்பதில்லை; ஏங்கிய அவன் விழியில் தேங்கிய நீர்த்துளிகள் மலைக்காற்றில் உலர்ந்ததேயன்றி அவன் கையால் அழியவில்லை. விரைவில் கோக்ரா நதிக்கரையை யடைய, அவனெதிரில் 'அரவிந்த' நகர் தோன்றிற்று. நதியில் நீத்தம் பெருகிநின்றும், கடத்தற்குரிய பாலம் சேய்மைக்கண் இருக்கவே, அதனை நாடிக் காலம்போக்க ஒவ்வானாய் மணிவண்ணன் நுரைத்தெழு நீரிலிறங்கினான். வலது கையில் சின்னத்தை உயரத் தாங்கிப் பிடித்தும், இடதுகையில் கோலைப்பற்றி ஊன்றியும் நடந்த வீரனது கால்கள் இருமுறை நிலையாது நீரா லிழுக்கப்பட்டன. நீச்சு நிலையாது திகைத்த இளைஞனை அச்சமயம் மூழ்காது காத்தது அவனன்னைதன் வழிபாடு போலும். அச்சின்னமும் அவனால் உறுதியாய்ப் பற்றப்பட்டது. இறைவனருளால் மறுகரையை யடைந்து, மணிவண்ணனும் ஓரடிப் பாதையொன்றைத் தொடர்ந்து நடந்து, ஓர் கோயிலை யெய்தினான்.

கோயிலில் மணியோசையொடு மங்கல முழவமும் நிரைந்திருந்தது பிளிறும் பெருங்களிறுகள் புகுந்து செல்லுமாறு அமைந்து வானுற உயர்ந்த வாயிலை மணிவண்ணன் குறுகுதலும், மணக்கோலம் பூண்டிருந்த வொரு மங்கையோ டவள்மணாளனும் உண்ணின்று வெளிப்போந்தனர். மணமக்க ளிவர்களைப் புடைசூழ்ந்த சுற்றத்தார், நல்லுடையுடுத்து நவமணி குயிற்றிய நற்கலன்க ளணிந்து, தம்மை மறந்து ஆரவாரித்துப் பெருங்குரலில் பேசிக் களித்தனர். முகங்கோட்டி நடந்த மணப்பெண்ணை, நேரிற்காணா நாணிய கருணாகரனும், கடைக்கண்ணால் அவள்எழில் நலங்கண்டு உள்ளம் பூரித்தான். காளையர் யாவரும் பரிகச வார்த்தை பல பேசி அவனை யடுத்து நகைக்க, உட்களி கொண்ட வனிதையின் வதனம்அன்றலர்ந்த செம்மலரினை யொத்துப் பொலிந்தது. பல்லியங்கள் நல்லியல் மங்கல இசைகளைப் பொழிந்து முழங்கின.

வெளிவருமிக் களியயர் கோலத்தை எதிர்கொண்டவனார்? காலில் வேகமும் கண்ணில் துன்பமுந் துளங்குமத் தூதுவனே! உடையினின்றும் உறை சொரிய இடையுறு ஆடை மலினமடைந்து காட்ட, கரிக்கோற் சின்னத்தை யுயர்த்திக் "கூடுமிடம் இலுப்பைத்தோப்பு; இக்குறியை எடுத் தோடு, ஓடு கருணாகரனே" என்னும் கடுமொழி புகன்றான். அந்தோ! இளந்தளிர்போன்ற மெல்லிய விரல்களைப் பற்றிய கை இமைப்பினில் உதிரஞ் செறிந்த சின்னத்தை ஏந்த நேர்ந்ததே. கோழிகூவி அற்றைப்பொழுது புலரு முன்னிருந்த அவன் மனநிலையும், சற்றுமுன்பு கடைக்கணோட்டிப் புளகமிகு களிப்பு மென்ன? கதுமென அது மாறிய தன்மைதா னென்னே! நகையுடன் அரும்பிக் களிநடனத்துடன் மலரவேண்டிய அந்நாள் நொடியில் மாறியவண்ண மிதுவேயோ? வதுவை முற்றுறாத கருணாகரனும் தலைவன் பணியைத் தள்ளமாட்டாதவனாய்த் தன் மணக்கோலத்தை மாற்றினான். அக்காலை அவன் தன் காதலியின் நயனங்களூற்ற பயத்தினைக்கண்டு, விடைகொள்ளும் மொழிபுகலின், உடைந்த உள்ளத்தால் நா குழறுமென அஞ்சி, வஞ்சிக் கொன்றும் புகலானாய்ச் சின்னந் தாங்கி வழிக்கொண்டான். ஓடும்போது அவன் மனதில் ஓடிய எண்ணங்களை அறிவார் யார்? அவனுக்குத் தொடக்கத்தில் துன்பமே மேலிட்டது. திரும்பியும் பாராமல் சென்றானது உள்ளத்தில் சினமுற்றதேனும், சிறிது நேரத்திலது அடங்கித் துன்பம் தோன்றிற்றெனினும், தலைவனது வேலை இழுக்குறாவண்ணம் செய்வதே தன் தொழிலென்னத் தேறினான். எதுவரினும் அது ஊழ்தான் என நினைத்திருத்தலே தனக் கமைந்ததெனத் தெளிந்து கடவுளை நோவதின்றி இடர்செய்த தன் தொல்வினையை நொந்துகொண்டான். காலையில் எண்ணிய எண்ணமெல்லாம் கணத்தில் மாறிய தன்மைபோல், துன்பமும் இக்கணம் மாறி, போரில்புகழ் பெற்றுத் திரும்பித் தன் காதலியை விரைவில் அடையுங் கருத்தே அவனுள்ளத்தில் நிறைந்தது.

நள்ளிரவில் வனத்திலெழு செந்தீ சினைக்குச்சினை வாவிச்செல்லுந் தன்மைபோல், சின்னமும் கணவாய்களையும் குகைகளையும் நொடியில் தாவிச் சென்றது. அதுசென்ற இடந்தோறும் இருந்த வீரர் அனைவரும் இலுப்பைத் தோப்பை நாடி நடந்தனர். இவர்களுள் மூத்துத்தளர்ந்து நடுங்கிய கையினர்சிலர், காக்கையே வெருவக் கவணெறி கரத்தரும் சிலர். பெரியரும் சிறியரும், போர்வல்லாரும் மற்றவரும், சிறுசிறு கூட்டங்களாய்ச் சிற்றாறுகளென்ன வழிக்கொண்டு படர்தலுற்று, முழங்கும் கடலென ஆரவாரித்து நிற்கும் இலுப்பைத் தோப்பினைச் சேர்ந்தனர். அச்சேனையில் குழுமியவர்களுள்

" தாய்க்கொரு
புதல்வராய் வந்த பொருந ரெத்தனையோ ?
வதுவை முற்று வயவ ரெத்தனையோ ?
புதுமணம் புனைந்த புருட ரெத்தனையோ ?
நொந்த சூலினர் நோவு பாராது
வந்திவ ணடைந்த மள்ள ரெத்தனையோ ?
தாய்முகம் வருந்தல் கண்டழுந் தன்சிறு
சேய்முகம் மறவாச் செருந ரெத்தனையோ
செயிருறு முழுந்தாள் சேர்ந்தழு பாலரைத்
துயிலிடைத் துறந்த சூர ரெத்தனையோ?"

ஆதலின் அன்னார் வகையேனும் தொகையேனும் இவையிவையெனத் தேர்ந்தியம்ப லருமையாகும். போரென்ற ஆர்வமே கைம்மிகப் பிறிதொன்றும் நினையாத தன்மை அக்குழுவினர்பால் பொதுவுற நிகழ்ந்தது.

மடவரல் - பெண். சம்மை - ஆரவாரம். பட்டயம் - கத்தி. கயல் கண் ஆலி - கயல் போன்ற கண்களிலிருந்து பெருகும் நீர். சன்னதம் - ஆவேசம். குயிற்றிய - பதித்துள்ள. பல் இயம் - பல வாத்தியங்கள். களியயர் கோலம்- களித்து விளையாடி வரும் காட்சி. உறை - நீர்த்துளி. புளகம் - மயிர்க்கூச்செறிதல். பயம் - அச்சம், நீர்.

தமிழ்ப் பாடம் 114.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[209-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

'இன்று இருவேமும் உரைத்தமொழி பிறரறியவோதாதொழிக' என்று சகாதேவனை விதித்தபின்னர், பாண்டவர் இருந்தவிடம் இருவரும் மீண்டடைந்து பாஞ்சாலியை நோக்கினனாய்ச் சகாதேவனும் சமாதானமே தக்கது என்றனன். இப்பொருள்படும் செய்யுள்விடலாயிற்று.

தருமனுக்குங் கருத்திதுவே தமருடன்போர் புரியாம
லிருநிலத்தி லுடன்வாழ்த லெனக்குநினை வென்
[றுரைத்தான்
வரிமலர்க்கண் புனல்சோர மலர்மறந்த குழல்சோர
விரைமலர்ச்செஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தழுதாள்
[மின்னனையாள் 32.

யாவரும் ஒன்றுகூடி வாழவேண்டு மென்பதே தன்னுடைய கருத்தும், என்று கண்ணனும் கூறிவிடவே பாஞ்சாலி பதைக்கின்றாள்.

பதவுரை.

தருமனுக்கும் - தருமராஜனுக்கும், கருத்து இதுவே - இதுவே எண்ணம்; தமர் உடன், - சுற்றத்தார்களுடன், போர்புரியாமல் - யுத்தம் ஒன்றும் செய்யாமல், இரு - பெரிய, நிலத்தில்-பூமியில், உடன் வாழ்தல் - சேர்ந்துவாழ்தல்தான், எனக்கும் - எனக்கும், நினைவு - எண்ணம், என்று உரைத்தான் - என்று கண்ணன் சொன்னான்.

(உடனே) மின் அனையாள் - மின்னலைப் போன்றவளாகிய பாஞ்சாலி, வரி - வரிகள் படர்ந்த, மலர் - தாமரை மலர் போன்ற, கண் - கண்களிலிருந்து, புனல் சோர - நீர் பெருகவும், மலர் - மலர்கள் அணிவதை, மறந்த - விட்டுவிட்ட, குழல் - கூந்தல், சோரசரியவும், (கிருஷ்ணனது) விரை - வாசனை பொருந்திய, மலர் - தாமரைமலர் போன்ற, செம் - செம்மையான, சே அடி கீழ் - சிவந்த பாதங்களில், வீழ்ந்து - விழுந்து, அழுதாள் - கதறினாள்

விரிவுரை:—கண்ணனது சேர்க்கையால் சகாதேவனும் சிறிது குறும்புசெய்ய நினைத்தான் போலும். ஆதலால் சமாதானம் ஒன்றும் நேராதென்று நிச்சயமாய் அவனுக்குத் தெரிந்திருந்தும் தன் சொற்கேட்டுப் பேதை பாஞ்சாலி எவ்வாறு பதைக்கின்றாள் என்று பார்க்கும் ஆசையினாலேயே அவன் அவ்வாறு 'பழுதில் புகழ்ப் பஞ்சாலி நீண்ட கருங்குழல் சோர நின்றாளை முக நோக்கிக்' கூறினானென்று கவி இதற்கு முன்செய்யுளில் பாடினார். ஆயினும் முன்செய்யுளில் பாஞ்சாலியின் முகத்தை நோக்கியதும், 'இளையோன் சந்து மிக வினிதென்றான்' என்றதும், கிருஷ்ணனைகவே கொண்டு, தருமனுக்கும் கருத்திதுவே என்ற இச் செய்யுளின் தொடக்கத்தோடு சேர்த்துப் பொருள் படுத்துவதும் கூடும். தமருடன் போர்புரியாது வாழ்வதேதனக்கும் கருத்தென்றுகண்ணனும் கூறியதுவஞ்சனை வார்த்தைகள் என்பதற்கு ஐயமில்லை. இதனோடு சகாதேவனும் அவ்வாறே கூறினான் எனக் கண்ணனே கூறலாவது அவனுடைய மற்றமாயங்களுக்கு இணங்கியதாகவேயிருக்கும். இதனால், தத்துவ உணர்வுடைய சகாதேவன் விளையாட்டிற்கேனும் வாய்மையல்லன விளம்பாத நிலையில் நின்றவனாவான். மற்று, முன் செய்யுளின்ஈற்றடியைச் சகாதேவனது வாசகமென்று கொள்வதால் குறையில்லை என்றக்கால், இச் செய்யுளின் முதலிரண்டடிகளையுங்கூட அவனுடைய வாசகமாகவே ஏற்பினும் அமையும். இவ்வாறு, உரைப்பவர் எவரென உறுதியாய் உணர இயலாவகை வில்லிபுத்தூரார் பலவிடங்களில் அமைத்துச் சுவைபைப் பெருக்குவது முண்டு.

சாலக் கனகன்றன் தனிமைந்தனை முனிந்த
காலத் தவனறைந்த கற்றூ ணிடைவந்தாய்
மூலப்பே ரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக் கிரிபோன் முன்னின்ற நெடுமாலே. 33.

பாஞ்சாலி கண்ணபிரானைக் கூவி முறையிடுகின்றாள்.

பதவுரை

கனகன் - இரண்யன், தன் - தன்னுடைய, தனி - ஒப்பற்ற, மைந்தனை-பிள்ளையாகிய பிரகலாதனை, சால-மிகவும், முனிந்தகாலத்து - கோபித்துக்கொண்ட காலத்தில், அவன் - அந்த இரண்யன், அறைந்த - அடித்த, கல் தூண் இடை - கல்தூணிற்கு மத்தியிலே, வந்தாய் - வந்து தோன்றினவனும்,

மூலம் பேர் - ஆதி மூலமே என்றபேரை, இட்டு - சொல்லி, அழைத்த - கூப்பிட்ட, மும்மதம் - மூன்று மதத்தினது, மால் - மயக்கமுடைய, யானைக்கு - கஜேந்திரனுக்கு, நீலக் கிரிபோல் - நீலமலைபோல, முன் - எதிரே, நின்ற - வந்து நின்றவனும் ஆன, நெடுமாலே - திருமாலே!

விரிவுரை:—இவ்விதம் முன் பிரஹலாதனுக்கும் கஜேந்திரனுக்கும் வந்தடைந்த இடுக்கண்களைத் தீர்த்தவனே என்று பாஞ்சாலி அழைப்பது, அவ்வாறே தன்னுடைய குறையையும் தீர்க்கவேண்டுமென்ற நோக்கமுடையதாதலால், இது கருத்துடையடை அணி, ஆகும்.

[தோன்
கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
யற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே. 34.

பதவுரை.

கண்ணிலான் - குருடனாகிய திருதராஷ்டிரன், பெற்று எடுத்தோன் - பெற்ற பிள்ளையாகிய துச்சாதனன், கற்றை - கற்றையாய் அடர்ந்த, குழல் - என் கூந்தலை, பிடித்து - பிடித்துக் கொண்டு, துகில் - எனது புடவையை, பற்றி - கையால் பற்றி, உரிய - அவிழ்க்க, பாண்டவர்உம் - என் கணவர்களாகிய பஞ்சபாண்டவர்களும், பார்த்து - பார்த்துக்கொண்டு இருந்தார் - சும்மாவிருந்தனர்,

கொற்றம்-வெற்றியுடைய, தனி-ஒப்பில்லாத, திகிரி சக்ராயுதத்தையுடைய, கோவிந்தா - கோவிந்தனே, அற்றைக்கும் - அந்த நாளிலும் கூட, என்மானம் - எனது மானத்தை, நீஅன்றி-நீ அல்லாது, வேறு யார்-வேறு எவர், காத்தார் - காத்தார்கள்.

மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்றுதமக் கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தா
லன்று விரித்த வருங்கூந்தல் வல்வினையே
னென்று முடிப்பதினி யெம்பெருமா னென்றழு
[தாள். 35.

பதவுரை.

மன்றில் - ராஜசபையில், அழைத்து - என்னை வரவழைத்து, எனக்கு - எனக்கு, மாசு அளித்த - அவமானத்தை விளைவித்த, மன்னவன்பால் - துரியோதனனிடத்தில், திறல்வீரர் - பராக்கிரமம் பொருந்திய வீரர்களாகிய பாண்டவர்கள், சென்று-போய், தமக்கு-

தங்களுக்கு, ஐந்து ஊர் - ஐந்து ஊர்களை, பெற்று யாசகம்செய்து வாங்கி, இருந்தால் - வாழ்ந்திருப் பார்களேயானால்,

எம்பெருமான் - எனது பெருமானே, வல்வினை யேன்-கொடிய வினையை உடைய நான், அன்றுவிரித்த - துகில் உரிந்த நாள்தொட்டு நான் விரித்துக்கொண் டிருக்கின்ற, அரும்கூந்தல் - அருமையான கூந்தலை, இனி-இனிமேல்,என்று முடிப்பது-நான்எப்பொழுது முடித்துக்கொள்வது, என்று அழுதாள் - என்று முறையிட்டுப் (பாஞ்சாலி) புலம்பினாள்.

இலக்கணம்

யகர ரகர ழகர மெய்களையேனும், உயிரையேனும் ஈற்றிலுடைய சொற்கள், வல்லினமெய்யை முதலி லுடைய சொற்களோடு புணரும்போது எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாமல் இயல்பாகவே இருப் பது பொதுவிதி யென்று முன்னர் (176வது பக்கம்) கூறினோம். இதற்கு மாறாயிருக்கின்ற சில சிறப்புவிதி களைப் பார்ப்போம்.

1. நிலைமொழியிறுதி வன்தொடர்க் குற்றியலுகரமா யிருக்குமாயின், வருமொழிமுதலில் வரும் வல் லெழுத்து எழுவாய்த்தொடரிலும் மிகுந்தேபுணரும். (குற்றியலுகரத்தின் இலக்கணத்தை 2வது வால்யூம், 147, 172, 192வது பக்கங்களிற் காண்க)

நாக்கு + துடித்தது = நாக்குத்துடித்தது
பற்று + சிதைந்தது = பற்றுச்சிதைந்தது
பூட்டு + பெரிது = பூட்டுப்பெரிது
முத்து + குவிந்தது = முத்துக்குவிந்தது
பேச்சு + பரவியது = பேச்சுப்பரவியது

குறிப்பு:—வன்றொடர்க் குற்றியலுகரத்திற்கு முன் தான் வலிமிகும். மற்றத்தொடர்களில், பாம்பு கடித் தது (மென்றொடர்), போழ்து புலர்ந்தது (இடைத் தொடர்), படகு கவிழ்ந்தது (உயிர்த்தொடர்), ஆறு பெருகிற்று (நெடிற்றொடர்), எஃகு சிறிது (ஆய்தத் தொடர்) என வலி மிகாது.

2. நிலைமொழி ஓரெழுத்தொருமொழியாயின் எழு வாய்த்தொடரிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தே பெரும்பான்மை புணர்கின்றது.

தீ + பற்றியது = தீப்பற்றியது
பூ + கமழும் = பூக்கமழும்
நா + குறிது = நாக்குறிது.

குறிப்பு:—எனினும், கை மை, என்பனபோல் ஐகார உயிரோடு சேர்ந்த ஓரெழுத்தொருமொழி களுக்குப்பின் வல்லினமெய் மிகுவதில்லை. கை + குறிது = கைகுறிது. மை + கரிது = மைகரிது.

ஆ (பசு), மா (விலங்கு) என்னும் ஓரெழுத்தொரு மொழிகளுக்குப் பின்னும், நீ என்ற முன்னிலைச் சொல் லின் பின்னும் எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது. ஆ + பெரிது = ஆபெரிது, மா + கொன் றது = மாகொன்றது. நீ + சொன்னாய் = நீ சொன் னாய்.

3 முதலெழுத்துக் குறிலாகவும் மற்ற எழுத்து நெடிலாகவும் அமைந்த இரண்டெழுத்துச்சொற்கள் நிலைமொழியாகுமாயின் எழுவாய்த்தொடரிலும் வரு மொழிமுத லுயிர் மிகுந்து புணர்வதும் உண்டு.

நறா + சுரந்தது = நறாச்சுரந்தது.
கரா + பிடித்தது = கராப்பிடித்தது
நிலா + பொழிந்தது = நிலாப் பொழிந்தது

4. தாரா, என்றொரு சொல் தமிழில் உளது. இது நாரை என்கிற பறவையின் பெயராகும். இச்சொல் லின்பின் வருகின்ற வல்லெழுத்து எழுவாய்த்தொட ரிலும் மிகுகின்றது.

தாரா + குறிது = தாராக்குறிது

5. இரண்டு குற்றெழுத்துக்களாலான சொல் நிலை மொழியாகி, வருமொழிமுதல் வல்லினமோடு புண ரும்போது எழுவாய்த்தொடரில் அவ் வல்லினமெய் மிகுந்தேனும் மிகாமலேனும் புணரலாம்.

கிளி + குறிது = கிளிக்குறிது, அல்லது கிளிகுறிது
தினை + சிறிது = தினைச்சிறிது, அல்லது தினைசிறிது.

கடு, விள, என்னும் சொற்களுக்குப்பின் கடுக் கொடிது, விளப்பெரிது என வல்லெழுத்து மிகுந்தே புணரும்.

ஆனால், அது இது எது என்னும் சுட்டு அல்லது வினா எழுத்துக்களை முதலில் யுடையதாய், இரண்டு குறில்களால் அமைந்திருக்கின்ற சொற்களுக்குப்பின் மிகாது.

அது + பெரிது = அது பெரிது
இது + பெரிது = இது பெரிது
எது + சிறிது = எது சிறிது.

6. ஊ, என்னும் உயிரில் முடிகின்ற சொற் களுக்குப்பின் எழுவாய்த்தொடரிலும் வல்லெழுத்து மிகும்.

கொண்மூ + பொழிந்தது = கொண்மூப் பொழிந்தது.
(கொண்மூ = மேகம்)

எனவே, இந்த ஆறு சிறப்புவிதிகளுக்குள் அடங் காதபோதெல்லாம் எழுவாய்த்தொடரில் வல் லெழுத்து மிகாதென்று பொதுவிதியின்படி நாம் கொள்ளவேண்டும்.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இனியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணு 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக்கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணு 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமா யிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—

KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்தன.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

சத்தியாக்கிரக இயக்கம் :—13-ம் தேதி சபார்மதி ஆச்ரமத்தைவிட்டுத் தொண்டர்களுடன் பிரயாணமான காந்தி அடிகள் இன்று மேர்விக் என்னும் ஊர் போய்ச் சேர்ந்தார் என்றும், அவ்வூர் வாசிகள் காந்தியடிகளுக்கும் தொண்டர்களுக்கும் வரவேற்பு அளித்னர் என்றும் தெரிகின்றன. போகுமிடங்களெல்லாம் காந்தி அடிகள் உப்புச் சத்தியாக்கிரஹம் செய்ய வேண்டியதைப் பற்றியும், இதற்கு இந்தியர் ஏராளமாக வந்து பலாத்கார மில்லாத வழியில் இப்போரில் கலந்து சுயராஜ்யம் பெறவேண்டும் என்றும், கூறுகின்றனராம். குஜராத்தெங்கும் ஜனங்களிடை ஊக்கம் பிறந்துளதெனத் தெரிகின்றது. காந்தி அடிகள் 21-ந் தேதியன்று புரோச் என்னும் ஊர் போய்ச் சேர்வார். அன்றைக்கோ மறுதினமோ சத்தியாக்கிரஹத்திற்கென ஏற்படுத்தப்பட்ட ஆஸ்ரா போய்ச்சேர்வர். என்றையதினம் சத்தியாக்கிரஹம் ஆரம்பமாகும் என்னும் விஷயம் தெரியவில்லை. வங்காளத்திலும் சத்தியாக்கிரஹத்திற்குத் தொண்டர் சேர்க்கப்படுகின்றனர் என்றும், அலகபாத்தில் ஜவாரிலால் சத்தியாக்கிரஹப் படைதிரட்டி வருகின்றார் என்றும் தெரிகின்றது. தென்னாட்டில் ஸ்ரீமான் ஸி ராஜகோபாலாசாரியார் சத்தியாக்கிரஹத்திற்கெனப் பெரிதும் முயன்றுவருகின்றார் என்று தெரிகின்றது.

***

சோ. வித்தியாசாலை அறிக்கை:—லக்ஷ்மிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலையின் அறிக்கை வருமாறு :—

இவ்வித்தியாசாலை சென்ற அக்ஷய ஆண்டு மாசித் திங்கள் 22-ம் நாள் அவ்வூர் உயர் திரு ந. சொ. அருணாசலஞ் செட்டியாரவர்களால் அமைக்கப் பெற்றது. அதுகாலை காரைக்குடி திருவாளர் சா. லெ. செ. செட்டியப்ப செட்டியாரவர்கள் திறந்துவைத்தார்கள். சிறுவர் சிறுமியர்க்குத் தமிழ் கல்வி, சங்கீதம், இலக்கணம், இலக்கியம், கணக்கு, சித்திரம் தேகாப்பியாசம், விளையாட்டு, சுகாதாரம், நூல் நூற்றல், ஆங்கிலம் ஆகியவைகளை வளர்த்தல் இக் கல்விச்சாலையின் நோக்கம்.

இங்குப் பல பள்ளிக்கூடப் புத்தகங்களும், கதைப் புத்தகங்களும், அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்களும் சேகரித்த புத்தகசாலை ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டின் துவக்கத்திலிருந்து பல வஸ்துக்கள் பொருட்காட்சியாக வைக்கப் பட்டுள்ளன.

அமராவதிபுதூரில் நடைபெற்ற செட்டிநாட்டு ஆரம்பப் பாடசாலைகளின் மாணவர் பந்தய விளையாட்டில் இந்த வித்தியாசாலையிலிருந்து சென்ற பிள்ளைகளில் 7 பேருக்கு முதல்பரிசும், 9 பேருக்கு இரண்டாவது பரிசும் கிடைத்தன என்று இக் கல்விச்சாலையில் மேற்பார்வை செய்துவரும் கொத்தமங்கலம் ராம. சுப்பிரமணியன் எழுதுகின்றார்.

***

கலையும் கல்வியும்:—கல்கத்தா சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் டாக்டர் கஸின்ஸ் அவர்கள் நிகழ்த்திய உபந்நியாசத்தின் கருத்து வருமாறு:—

“உலகம் முழுதிலுமே, கல்வியினிடம் கலைக்கு எவ்வளவு இடமுளது என்பதுபற்றி அறிஞர்களது அபிப்பிராயம் மாறிவருகின்றது. ஒரு தலைமுறைக்கு முன் கலை ஆடம்பர வாழ்விற்குரிய தொன்றெனப் பெரும்பான்மையோராலும் கருதலாயிற்று. சென்ற 30 வருடங்களாகக் கல்வி போதிக்கும் வழியில் நான் அனுபவம் பெற்றுள்ளேன். மாணவர்கள்பால் காணப்படும் எவ்விதக் குறைக்கும் கலை மருந்தென்பதை நான் அனுபவமூலம் கண்டுள்ளேன். இயற்கைக்கு மாறான மனநிலையுள்ள பிள்ளைகளைத் திருத்துவதற்கு அமெரிக்காவில் கலையுணர்வின் பயிற்சி அளிக்கப் பெறுகின்றது. நான் உலகயாத்திரை செய்கையில் இப்பயிற்சி பலனை அளித்துளதென்பதையும் கண்டேன். நெறிதவறிப் படரும் மாந்தர் மனதை உயர்த்தி அவர்களை நல்வழி நடக்கச் செய்யவல்லது கலை. ஆகவே கலையுணர்வு கல்வியின் முக்கிய அம்சமாகும். இவ்வழியில் கல்விமுறை திருத்தமுறுமாயின் வருங்காலத் தலைமுறையாரிடம் பெரிய மாறுதல் ஏற்படும். ஆண் பெண் இருபாலார்க்கும் ஏற்படும் காம உணர்ச்சி இயற்கையானது. அவ்வுணர்ச்சியின் ஆர்வம் கலையுணர்வாக மாறுமானால் புலனுறு அவா மடியலாகின்றது. தற்காலக் கல்விமுறை இந்திரியநுகர்ச்சியை வளர்க்குந்தன்மையதாகவேயிருக்கின்றது. மன உலகில் நடமாடிக் களிப்பதற்கியலாமையாற்றான் மாந்தர் முடிவிலாது இந்திரியத்தைச் சுற்றிச்சுற்றி யுழல்கின்றனர். ஆகவே இந்தியர் கல்விவிஷயத்தில் சிறிது மனதைச் செலுத்திக் கலைவழி பயிலுமாறு கல்விமுறையைத் திருத்தியமைக்கவேண்டும். இதுவிஷயமாய்க் கல்வி நிலயத்தார் கவனித்து வேண்டியன செய்வார்களாக.”

***

சணல் ஆலைவேலை நிறுத்தம்:—வங்காளச் சணல் ஆலை சிலவற்றில் வேலைநிறுத்தம் ஏற்பட்டுள்ளதென்றும், டிடாகூர் சணல் தொழிலாளர் சங்கக் காரியதரிசியுள்பட நால்வர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும், இவர்கள் கைது செய்யப்படக் காரணம் போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கியவர்களுடன் கலந்த குற்றம் என்றும் கல்கத்தாச் செய்திமூலம் தெரிகின்றது.

89096

ரூ. 500 இனும்! எப்படி?

விபரம் தெரிய ½ அணு ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,
தபாற்பெட்டி 99. சென்னை.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு ,,	,,	2 8 0
தனிப்பிரதி விலை	அணு	0 4 0

விலாசம் :—‘பாரதி’ கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF. BENOY KUMAR SARKAR, M.A. **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT :

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

HINDU-PAD-PADASHAHI :

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR, M.A., Ph. D., Dacca. **Rs. 3**

ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA

by V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V. V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION

by MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

DIALOGUE DIVINE AND DRAMATIC

by GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம். ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கப்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை கா.ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி ஜயராம ஐயர் ... 0 5 0
11. வலிவிக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிர மணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே.பி.சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்–S. சீனிவாசையர்... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II " **As. 4.**
23. Book III " **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6.**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

(V. P. Charges, Extra of the Prices.)

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)